பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 05 புதன்கிழமை (18.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:112

# வன்னி நிலைமை குறித்து நேற்று

# பான் கி மூன் – மஹிந்த பேச்சு

## தொலைபேசி மூலம் பல விடயங்கள் எடுத்துரைப்பு



கொழும்பு, மார்ச் 18

★ புலிகளின் பிரதேசத்திலிருந்து மக்கள் அதிக எண்ணிக்கையில் வெளியேறி வருகின்றனர்.

★ மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் பொருள்கள் இப்போது கப்பல் மூலம் ஒழுங்காக, சீரான முறையில் அனுப்பப்படுகின்றன.

★ மக்கள் தங்கும் இடங்கள் மீது கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தக்கூடாது என இராணுவத்தினருக்கு அரசு கடும் உத்தரவு.

★ அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி- மூனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு வன்னி நிலைமை குறித்து உரையாடினர். அப்போது மேற்கண்ட விடயங்களை ஜனாதிபதி மஹிந்த, பான் கி - மூனின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



# யுத்தத்தை நிறுத்துமாறு இரு தரப்பிடமும் ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் கோரிக்கை

## இராஜதந்திரிகள் குழுவை அனுப்பவும் முடிவு

பிரஸல்ஸ், மார்ச் 18

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் உடனடி யுத்த நிறுத்தமொன்றுக்கு இணங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் இது தொடர்பான அழுத்தங்களைக் கொடுப்பதற்காகத் தனது இராஜதந்திரிகள் குழுவொன்றை விரைவில் இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டர் பெரேராவோல் டெனொர் பிரஸல்ஸில் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடபகுதியில் இடம்பெறும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கோரிக்கையை நிராகரித்தது அரசு

கொழும்பு, மார்ச் 18

ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த யுத்த நிறுத்தத்திற்கான வேண்டுகோளை இலங்கை அரசு உடனடியாகவும், உறுதியாகவும் நிராகரித்துள்ளது.

இவ்வாறான யுத்தநிறுத்தம் விடுதலைப் புலிகள் மீண்டும் தம்மைப் பலப்படுத்தவே உதவும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளுக்கு இணங்குவதைத் தவிர இவ்வாறான

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா முகாம்களிலுள்ள மக்களை சுதந்திரமாக நடமாட அனுமதிக்குக!

### ஐ.நா.வலியுறுத்து

நியூயோர்க், மார்ச்18

வவுனியாவில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஐக்கிய நாடுகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

திங்கட்கிழமை செய்தியாளர்களுக்குப் பதிலளிக்கையில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

வன்னி மக்களுக்கான முகாம்களுக்கு ஐக்கிய நாடுகள் நிதியுதவி வழங்குமா என்ற கேள்விக்குப் பதிலளித்துள்ள ஹோம்ஸ்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா வழங்கிய உதவியாலேயே பயங்கரவாதத்தை ஒழிக்க முடிந்ததாக நாடாளுமன்றில் அரசு அறிவிப்பு

## அது தொடர்வதாகவும் சபை முதல்வர் புகழாரம்

கொழும்பு, மார்ச் 18

இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கிவரும் பாரிய ஒத்துழைப்புக் காரணமாகவே புலிப் பயங்கரவாதத்தைத் தம்மால் இந்தளவுக்கு ஒழித்துக்கட்ட முடிந்துள்ளது என்று அரசு நேற்று நாடாளுமன்றில் உறுதிபடக் கூறியது.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைக்குத் தொடர்ந்தும் இந்தியா வழங்கிவரும் இந்த உதவிகள் அளவிட முடியாதவை என்றும் அரசு மேலும் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர திஸாநாயக்க இந்திய வைத்தியர்களின் வருகை தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் விசேட கூற்று ஒன்றை வெளியிட்டார். அக்கூற்றுக்குப் பதிலளித்த சுகாதார அமைச்சரும் சபை முதல்வருமான நிமால் சிறிபால டி சில்வாவே அப்போது இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் புலிப் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட இந்தியா எமக்குப் பாரிய ஒத்து

(15 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் தற்கொலைத் தாக்குதல் இராணுவத்தினருக்கு இழப்பு எதுவும் இல்லை

கொழும்பு, மார்ச் 18

புதுக்குடியிருப்பிற்கு மேற்கே நிலைகொண்டிருந்த விசேட படைப்பிரிவினர் மீது நேற்றுமுன்தினம் மதியம் விடுதலைப் புலிகள் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர் என்று படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இராணுவச் சீருடையைப் போன்ற சீருடையை அணிந்துகொண்டு வந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரே இத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை மீண்டும் இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 18

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஒருவார இடைவெளியின் பின் இன்று மீண்டும் ஆரம்பமாகவிருக்கின்றது.

கப்பல் சேவையை இன்றும், எதிர்வரும் 24 ஆம் 30 ஆம் திகதிகளிலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

கப்பல் பயணத்துக்குச் செயலகத்தில் பதிவு செய்வோரைப் பயணத்துக்கு இரு தினங்களுக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளும் படி அரச அதிபர் கேட்டுள்ளார்.

எனினும் குறுகியகால அறிவித்தலில் கப்பல் சேவை நடைபெறும் திகதிகளில் மாற்றம் ஏற்படலாம் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை-

கொழும்பில் இடம்பெறும் தேசியமட்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலை ஐ.தே.கவின் எம்.பிக்கள் தடுத்து வைத்ததாக அமைச்சர்கள் சபையில் கிளம்பிய புரளியால் பரபரப்பு!

## ஆனால் அவர் குழுக் கூட்டத்துக்கு தலைமை வகித்தார்

கொழும்பு, மார்ச் 18

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்திற்கு வர விடாமல் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அவரைத் தடுத்துவைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர் என்று அரசு அமைச்சர்கள் நேற்று நாடாளுமன்றில் புரளியைக் கிளப்பி விட்டனர்.

இதனால், நாடாளுமன்றில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாகத் தேடிப் பார்ப்பதற்காக ஊடகவியலாளர்கள் அங்கும் இங்கும் ஓடத் தொடங்கினர்.

வாய்மூல விடைக்கான நேரத்தின் போதே அமைச்சர்கள் ஜெகத் புஷ்பகுமார

(15 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையங்களில் வேண்டிய வசதிகள்

# விடுவிக்கப்பட்ட பகுதியிலிருந்து வந்தவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உறவினரிடம் செல்லலாம்

### நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

வடக்கில் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், அவர்களது உறவினர்களுடன் தங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து யாழ்.மாவட்டத்துக்கு வந்து சேர்ந்துள்ளவர்கள் தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுவரை 1,258 குடும்பங்களைச் சேர்ந்த 3,686 பேர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 113 பேர் திருநகரிலும் -

189 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேர் கோப்பாயிலும் -

416 குடும்பங்களைச் சேர்ந்த 1,316 பேர் மிருசுவிலிலும் -

209 குடும்பங்களைச் சேர்ந்த 706 பேர் கொடிகாமத்திலும் -

65 குடும்பங்களைச் சேர்ந்த 186 பேர் கைதடிச் சைவச்சிறுவர் இல்லத்திலும் -

324 குடும்பங்களைச் சேர்ந்த 801 பேர் கைதடி பல்கலைக்கழக மாணவர் விடுதியிலும் - தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அரச அதிபரின் செய்திக் குறிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கு தேவையான மூன்று வேளை சமைத்த உணவு, அடிப்படைத் தேவைகள் யாவும் மாவட்ட செயலகத்தாலும் தொடர்புடைய பிரதேச செயலகங்களாலும் வழங்கப்பட்டு வருகின்றன.

* இவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் யாவும் அடையாளம் காணப்பட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன.

* இங்கு தங்கியிருக்கும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன் சீருடைகளும் தைத்து வழங்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காக நலன்புரி நிலையங்களில் ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* இங்கு தங்கியிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களது சேவை முறைப்பாட்டினை அவர்களுடன் தொடர்புடைய திணைக்களங்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை யாழ்.மாவட்டத்தில் இணைப்புச் செய்து சம்பளம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் வந்த அரச உத்தியோகத்தர்களுக்கு தற்போது சம்பளம் வழங்கப்படுகின்றது. ஓய்வூதியம் பெறுவோர் ஓய்வூதியம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* நலன்புரிநிலையத்தில் உள்ள மக்கள் தமது வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காக வங்கிகள் தமது சேவையினை நலன்புரி நிலையத்திலும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

* இங்கு தங்க வைக்கப்பட்டிருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டோரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களது உறவினர்கள் அவர்களைச் சந்திப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* இங்கு தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களின் பொழுதுபோக்குக் கருதி பத்திரிகைகள் வழங்கப்படுவதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், தொலைக்காட்சிப் பெட்டி என்பன வழங்கப்பட்டுள்ளன.

## சொக்லெட்டுகளைத் தின்று 100 வயது வரை வாழும் பாட்டி

ல்ண்டன், மார்ச் 17

40 வயதைத் தாண்டியதுமே சர்க்கரை, கொழுப்பு, இரத்த அழுத்த நோய் என விதவிதமான நோய்களில் சிக்கி, பத்தியச் சாப்பாடுகளை பலர் சாப்பிட்டு வருகின்றனர். இந்த நிலையில், இங்கிலாந்து டேவான் நகரில் 100 வயது பாட்டி ஒருவர் தினம் சொக்லெட்டு பார்களை தின்று வருகிறார்.

இவர் வாரம் 30 சொக்லெட்டு பார்களை தின்கிறார். இவர் பெயர் பெக்கி கிரிபித்ஸ் ஆகும். இவர் 4 டன் சொக்லெட்டுகளை, கிட்டத்தட்ட 70 ஆயிரம் சொக்லெட்டு பார்களை தின்று தீர்த்துள்ளார்.

சமீபத்தில்தான் இவர் 100 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவர் ஸ்வீட் கடை ஒன்றை வைத்து நடத்தி வந்தார். அதில் கிடைத்த இலாபத்தில் சொக்லெட்டுகளாக வாங்கித் தின்று தீர்த்தார். இதனால் கடையை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், அவர் சளைக்கவில்லை.

தனக்குக் கிடைக்கும் பாக்கெட் மணியில் (பணத்தில்) சொக்லெட்டுகளை வாங்கித் தின்று வருகிறார்.

## உணவகங்களில் தின்பண்ட விலைகள் நாளை மறுதினம் தொடக்கம் குறைக்கப்படும்

குடாநாட்டில் உள்ள உணவகங்களில் தின்பண்டங்களின் விலைகள் எதிர்வரும் (நாளை மறுதினம்) வெள்ளிக்கிழமை தொடக்கம் குறைக்கப்படும்.

யாழ். செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலில் விலைகுறைப்புக் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், உணவகங்களின் உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய விலைகளின் விவரம் விலைப்பட்டியல் உணவகங்களின் முன்பாக காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுள்ளார்.

தின்பண்டங்களின் பழைய புதிய விலை விவரம் வருமாறு:

| பொருள்கள் | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| மரக்கறிச் சாப்பாடு | 70/= | 65/= |
| அசைவச் சாப்பாடு | - | 90/= |
| பால் தேநீர் | 20/= | 15/= |
| "பிளேன்" தேநீர் | 15/= | 10/= |
| வடை பெரியது | 20/= | 18/= |
| வடை சிறியது | - | 15/= |
| றோல்ஸ் | - | 18/= |
| றொட்டி | - | 08/= |

அதேவேளை-

பல்கலைக்கழகச் சூழலில் உள்ள உணவகங்கள் மாணவர்களின் நலன் கருதி அளவுச் சாப்பாட்டை 50ரூபாவில் இருந்து 45 ரூபாவாக விற்பனை செய்ய வேண்டும் என்று அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1-111)

## செட்டிகுளம் கதிர்காமர் கிராம நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு பல வசதிகள் செய்யப்படும்

### அமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் முடிவு

வவுனியா, மார்ச் 18

வவுனியா கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் தங்கியுள்ளவர்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்வுகண்டு வருகிறார்.

வவுனியாவில் அமைச்சர் நேற்று முன்தினம் கூட்டிய மாநாடு தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

செட்டிகுளம் கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள நலன்புரி நிலையம் மற்றும் பம்பைமடு நலன்புரி நிலையம் ஆகியவற்றின் நிர்வாகத் தரப்பினரையும், சுகாதாரம், கல்வி, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை போன்ற துறைகள் சார்ந்த உயர் அதிகாரிகளையும், பாதுகாப்புத்தரப்பினரையும் கொண்ட மாநாடு ஒன்றை அமைச்சர் நேற்று முன்தினம் கூட்டி பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அவற்றில் பல பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகளை எட்டியுள்ளார்.

வவுனியா அரச அதிபர் மற்றும் மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்ட இம் மாநாட்டின் போது, கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் தங்கியுள்ள மக்களுக்கு சமையல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விறகு வழங்குவதற்கும் இம் மக்கள் தங்கியிருக்கும் குடியிருப்புக்களின் கூரைகளுக்கு கிடுகுகள் வேயவும், குடியிருப்புக்களின் யன்னல்களை விசாலமாக்கி அமைக்கவும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் காகிதாகிகள் வழங்கவும் கூட்டுறவுச் சங்கத்தை விஸ்தரிப்பதோடு, அதன் கிளைகளை அதிகரிப்பதற்கும் மண்வெட்டி, கத்தி, கோடரி போன்ற உபகரணங்களை வழங்குவதற்கும், புடவைக் கடை ஒன்றைத் திறப்பதற்கும், மலிவு விலையில் மீன் மற்றும் மரக்கறி விற்பனையை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இம் மக்களுக்கு தற்போது நிவாரணப் பொருள்களாக அரிசி, மா, சீனி, பருப்பு மற்றும் சமையல் எண்ணை மாத்திரமே வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் ஏனைய உப உணவுப் பொருள்களை வழங்க அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று முன்வந்திருப்பதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்துரைத்தார்.

(அ-1)

## வடமராட்சி நோக்கி வந்த படகுகள் மீதான சூட்டில் தும்பளையைச் சேர்ந்த சிறுவன் மரணம்

புதுமாத்தளனில் இருந்து வடமராட்சி நோக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை படகுகளில் புறப்பட்டவர்கள் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் தும்பளையைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

தேவநாயகம் தனுசன் (வயது 9) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

சூட்டுக்கு இலக்கான படகுகள் பருத்தித்துறை முனைப்பகுதியை ஞாயிற்றுக்கிழமை மாலை வந்தடைந்தன. அவற்றில் வந்தவர்களை கடற்படையினர் மீட்டு, பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு சிறுவனின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் படகுவந்து சேர்ந்த முனைப்பகுதிக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

மரண விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறை அரசினர் வைத்திய சாலைடாக்டர்ஸ்மயிலேறும்பெருமாள் பிரேதபரிசோதனை செய்தபின் சடலம் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-1)


## கோழிக்குஞ்சு விநியோகம்

பஹிரா புறொயிலர் குஞ்சுகள் 19.03.2009விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் -
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.


## கண்ணீர் அஞ்சலி



வேலணை 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5/2, முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவரும் யாழ் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளரும் ஆகிய திருமதி இரஞ்சிதமலர் யோகேஸ்வரன் அவர்களின் பாசமிகு தாயார்.

**நாகலிங்கம் விசாலாட்சி**

அவர்களின் மறைவால்துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை தெற்கு விவசாய சம்மேளனம்,
வேலணை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
வேலணை மேற்கு நாவலர் சனசமூக நிலையம்.

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

### அமரர் மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்

(முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)



எமது குடும்ப விளக்கு அணைந்து
இருளில் மூழ்கி ஓராண்டாகியதே!
துன்பக்கடலில் மூழ்கி உறைந்து போனேனே!
மீளா நித்திரையில் சென்றீரே!
நான் விழித்துக் கொண்டே இருக்கிறேன்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டி நிற்கின்றேனே.

அன்புத் துணைவர்
திருஞானசம்பந்தர்
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)
வேலணை,
வேலணை மேற்கு.

மலர்வு: 15★10★1946 உதிர்வு: 29★03★2008

திதி: 18.03.2009

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் கமலாம்பாள்

இலகடி, கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கமலாம்பாள் நேற்று (17.03.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்- பூரணம் தம்பதிகளின் மகளும் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் திருநாவுக்கரசு, ஜெகதீஸ்வரி, பாஸ்கரன், தயாகரன் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜீவிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் கலைவாணி, மலர், சிவநாதன் ஆகியோரின் மாமியாரும் யனுசன், யனுசியா, கஜலக்சன், கவியழகன், சுவாதிகா, மதுராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2009) புதன்கிழமை மு.ப. 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலகடி,
கோப்பாய் வடக்கு.

தகவல்: மகன்- தயாகரன்
(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யாரிடம் கேட்பது நீதியும் நேயமும் ...?

வன்னிப் பகுதியில் நடைபெற்று வரும் மோதல்களினால் - போரின் விளைவாக - 60 ஆயிரம் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த விவரத்தை வெளியிட்டிருப்பது வன்னியில் இயங்கும் தமிழீழ விடுதலைக் கழகம் அல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர் அவசர நிதிய நிறுவனமே (யுனிசெப் நிறுவனமே) மேற்கண்ட புள்ளி விவரத்தை வெளியிட்டிருக்கிறது.

அதனால் மேற்சொன்ன விவரம் கூட்டிக் குறைக்கப்பட்ட எண்ணிக்கை என்று அரசாங்கம்- அதன் கல்வி அமைச்சு - மறுப்புத் தெரிவித்துவிட முடியாது.

இதனை எதற்காகக் குறிப்பிட நேரிடுகிறது என்பதற்குக் காரணம் உண்டு. வன்னி சம்பந்தமாக சர்வதேச அமைப்புக்கள், நிறுவனங்கள் வெளியிடும் புள்ளி விவரங்கள் ஊதிப் பெருப்பிக்கப்பட்டவை என்று அரசு எடுத்தாற் போல் மறுப்புத் தெரிவிப்பது வழக்கமாகி வருகிறது.

சர்வதேச அமைப்புகள் தமது புள்ளிவிவரங்களை வெளியிடுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அரசாங்க அமைச்சுக்களை அல்லது பிரதிநிதிகளைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு அரசிடம் உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை வன்னியில் போரினால் இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்து வெளியிட்ட புள்ளிவிவரம் பெருப்பிக்கப்பட்டது என்றவாறு பெரும் வாதப் பிரதிவாதங்கள் தோற்றுவிக்கப்பட்டு அது இன்னும் தணியவில்லை.

அதேபோன்று 'யுனிசெவ்' அமைப்பு வெளியிட்டுள்ள போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையும் அரசுக்கு ஒவ்வாமையைக் (Alergy) கொடுக்கலாம். நிற்க!

ஐ.நாவின் சர்வதேச சிறுவர் அவசர நிதியம் வெளியிட்ட எண்ணிக்கையை ஒருபுறம் வைத்துவிட்டு, அது குறிப்பிட்டுள்ள தாக்கம் குறித்துச் சிந்திக்கும்போது தமிழர்களுடைய இன்றைய சந்ததி மட்டுமின்றி வருங்காலச் சந்ததியும் எத்துணை பாதிப்புக்கு ஆளாகப் போகிறது என்பதனை நினைத்துப் பார்க்கவே பயங்கரமானதாகத் தோன்றுகிறது.

அரசாங்கத்தின் 'மனிதாபிமான நடவடிக்கை' தொடங்கப்பட்ட நாளிலிருந்து, மோதல் காரணமாக பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் கடும் காயங்களுக்கு ஆளாகியுள்ளனர். நூற்றுக்கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று 'யுனிசெவ்' கணக்கிட்டுள்ளது.

வன்னி வாழ் சிறுவர்கள் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலான காலப்பகுதியில், பன்னிரண்டு தடவைகளுக்கும் கூடுதலாக பாதுகாப்புத் தேடி இடம்விட்டு இடம் பெயர்ந்துள்ளனர் என்ற தகவல்களையும் யுனிசெவ் வெளிகொணர்ந்திருக்கிறது.

அவை மட்டுமின்றி, தமது வயதுக்கேற்ற வசதிகள் இன்றிப் பதுங்கு குழிகளிலும் மறைவிடங்களிலும் தொடர்ந்து வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனையும் மிகுந்த கவலையுடன் தெரிவித்திருக்கின்றது.

போர் இல்லாத காலத்தில், அமைதி நிலவிய காலத்தில் , சிறுவர்களாக இருந்தவர்கள் பெற்றோராலும் ஒட்டு மொத்தமாக சமூகத்தினாலும் எவ்வளவு அக்கறையுடனும் பராமரிப்புடனும் பேணி வளர்க்கப்பட்டவர்கள் என்ற நிலையுடன் ஒப்பிடும்போது, இன்றைய வன்னிச் சிறுவர்களுக்கு ஏற்படக்கூடிய உள, உடல் பாதிப்புகள் எல்லையற்றனவாக இருக்கப்போகின்றன என்ற சோகம் எவரது மனதையும் நெருடும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள்; அடுத்த நாள் தமிழர் சமூகத்தின் முதுகெலும்பாகத் திகழவிருப்பவர்கள். சிறுவர்கள் தமக்குரிய வசதிகள் இல்லாமல் - அடிப்படை வசதிகள்-அடிப்படை பராமரிப்புகள் - இன்றி வளர்வது எதிர்காலத்தில் நினைக்கவொண்ணாத பாதிப்புகளையும் நட்டத்தையும் சமூகக் கட்டமைப்பில் குலைவையும் உருவாக்கப்போகிறது என்று சிந்திக்க மனம் பதறுகிறது.

வன்னி மோதலில் அகப்பட்டு காயமுற்று திருகோணமலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை, போரினால் அவர்கள் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கு ஒரு குறியீடாக அமைகிறது. அவர்களில் பலர் அவயவங்களை இழந்தும், பிஞ்சு மேனியில் ஆறாக் காயமுற்றும் வந்திருப்பது யுனிசெவ்வின் அறிக்கையினை ஆமோதிப்பதாகவே அமைகிறது.

ஒட்டு மொத்தத்தில், தமிழர்களின் இன்றைய சந்ததி மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையும் போரினால் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படவுள்ளது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத ஒரு பாதகநிலை. போர் ஒன்று நடைபெற்றால் இத்தகைய நட்டங்கள் உண்டாவது தவிர்க்கமுடியாததே என்று கூறி அல்லது தர்க்கித்து மனம் ஆறக்கூடிய விவகாரமும் அல்ல இது.

இன்றைய உலகியல் நடப்புகளில் சிறுவர்களுக்கென உரிமைகள் வகுக்கப்பட்டு, அவர்கள் உடல், உள, வளம் நிறைந்த எதிர்காலப் பிரசைகளாக- சந்ததியினராக- பேணப்படவேண்டும் என்று பல சர்வதேச நியமங்களும் பிரகடனங்களும் சட்டமுறைகளும் உலகளாவிய ரீதியில் கைக்கொள்ளப்படுகின்றன.

அவற்றை எல்லாம் தூக்கிவீசி, காலில் போட்டு மிதிப்பது போன்று வன்னியில் போரின் விளைவுகள் நாசகாரமாகியுள்ளன. மனித நேயம், மனிதாபிமானம் என்ற அடிப்படைப் பண்புகளை சுனாமி அலை போல வந்து அடிபெயர்த்திருக்கிறது போர். இதற்கு யாரிடம் நீதியும் நேயமும் கேட்பது.....?

# சுவிஸ் தூதரகத்தின் முதன்மைச் செயலர் நேற்று யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம்

## உயிர் அச்சுறுத்தலால் சரணடைந்தோரைப் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், மார்ச்18

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் புறோணா ஹெரிகன் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவ்வருடன் நோர்வே தூதரகத்தின் அதிகாரிகள் குழுவொன்றும் யாழ்.வந்துள்ளது.

சுவிஸ் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் அடங்கிய குழுவினர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்டனர். நீதிமன்றத்தின் அனுமதியுடன் இவர்கள் சிறைச்சாலைக்கு வருகை தந்ததாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட குழுவினர் அங்கு உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரணடைந்து தங்க வைக்கப்பட்டுள்ளோரைப் பார்வையிட்டதுடன் அவர்களது பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

அத்துடன் இக்குழுவினர் தெல்லிப்பழையில் இயங்கிவரும் புனர்வாழ்வு முகாமிற்கும் விஜயம் செய்து அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளோரையும் பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை-

நேற்று முன்தினம் யாழ்.செயலகத்திற்கு சென்ற இக்குழுவினர் யாழ். அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி, குடாநாட்டில் மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது அவர்கள் அரச அதிபரிடம் கேட்டறிந்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்திற்குச் சென்ற இந்தக் குழுவினர் குடாநாட்டில் இடம்பெற்ற கடத்தல்கள், காணாமல் போதல், படுகொலைகள் தொடர்பான விவரங்களையும் திரட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தேவார ஒலிநாடா வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 இல் சைவ சமய பாடம் கற்கும் மாணவர்களுக்கான பாடச் செயற்றிட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட தேவார ஒலிநாடா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலகத்தில் வெளியிடப்படவுள்ளது.

அன்றைய தினம் பாடசாலை அதிபர்கள் அல்லது பாட ஆசிரியர்கள் ஒலிநாடாவினைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (50-207)

# 500 தொன் உணவுப்பொருள்கள் 'பின்ரன்' கப்பல் மூலம் புதுமாத்தளனுக்கு

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்

கொழும்பு, மார்ச்18

அரச கட்டுப்பாட்டில் இல்லாத முல்லைத்தீவு பிரதேச மக்களுக்கென மேலும் ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளது.

இதன் பிரகாரம் 500 மெற்றிக் தொன் உணவுப்பொருள்கள் ஏற்றப்பட்ட 'எம்.வி.பின்ரன்' என்ற கப்பல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை திருகோணமலையிலிருந்து புதுமாத்தளன் பிரதேசத்தை நோக்கிச் சென்றதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரத்ன தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள மக்கள் பாரிய உணவு நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே மேற்படி 500மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஆணையாளர் திவாரத்ன மேலும் கூறுகையில், இராணுவத்தினரால் மீட்கப்படாத பகுதிகளில் தங்கியுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த வாரத்திலும் 500 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் திருகோணமலையில் இருந்து கப்பல் மூலமாக புதுமாத்தளனுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதில் மேலும் ஒரு கட்டமாக பருப்பு, சீனி, மா மற்றும் மரக்கறி எண்ணெய் உள்ளிட்ட 500 மெற்றிக்தொன் உணவுப்பொருள்கள் அனுப்பி வைப்பதற்கு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் தீர்மானித்தது.

இதன் பிரகாரம் மேற்படி உணவுப் பொருள்கள் அடங்கிய 'எம்.வி. பின்ரன்' என்ற கப்பல் நேற்று முன்தினம் திருகோணமலையிருந்து புதுமாத்தளனுக்கு புறப்பட்டுச் சென்றது. அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமைய தேவைப்படுமிடத்து மேலும் உணவுப் பொருள்களை அனுப்புவதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாவனையாளர் அதிகார சபையின் பணிகள் ஆளணிப் பற்றாக்குறையால் காலதாமதம்

யாழ்ப்பாணம், மார்ச்18

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணிகளை முன்னெடுப்பதற்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் அதிகார சபையின் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்ட பாவனையாளர் அதிகாரசபையின் அலுவலகத்தில் தற்போது இரண்டு உத்தியோகத்தர்களே கடமை புரிந்து வருகின்றனர்.

இதனால் யாழ்ப்பாணத்தில் பணிகளை விரைவாக முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டுவரை 7 உத்தியோகத்தர்கள் இங்கு கடமையாற்றினார்கள்.

தற்போது இரண்டு பேர் மட்டுமே கடமையாற்றுவதால் கள நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாதுள்ளதாகவும் வழக்குத் தாக்கல் அறிக்கைகள் தயாரிப்பதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (50-9)

# யாழ்ப்பாணத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கான முதலாம் காலாண்டுக்குரிய மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இந்த ஆண்டின் முதலாம் காலாண்டுக்குத் தேவையான மருந்து வகைகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட இந்த மருந்து வகைகளை உடனடியாக அரசினர் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கையை சுகாதார சேவைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

அரசினர் வைத்தியசாலைகளில் கடந்த சில மாதங்களாக முக்கியமான மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவந்தது.

வைத்தியசாலைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவியமையால் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களில் அதிக பணத்தைக் கொடுத்து மருந்தை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (50-9-224)

# கப்பல் சேவை சீரின்மையால் தேங்கியுள்ள தபால் பொதிகள்

யாழ்ப்பாணம் , மார்ச் 18

யாழ்ப்பாணம்-திருமலை இடையேயான கப்பல் சேவை தடைப்பட்டுள்ளமையால் தபாற்சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரண்டு வாரமாகக் கப்பல் சேவை தடைப்பட்டுள்ளது. இதனால் யாழ்ப்பாணத்துக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தபால் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டிய தபால்கள் 35 பொதிகளில் தேங்கிக் கிடக்கின்றன. அதேபோன்று திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவேண்டிய 490 தபால் பொதிகள் திருகோணமலைத் தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தபால் பொதிகள் இவ்வாறு தேங்கிக் கிடப்பதால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-9)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 06 | 19.03.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.ப. 01.44வரை |
| நட்சத்திரம்: | மூலம் |
| | மாலை. 6.33 வரை |
| சுபநேரம்: | 07.48 - 09.18 |
| ராகுகாலம்: | 01.48- 03.18 |

# கனடா மொன்றியலில் நடைபெற்ற 'உரிமைப்போர்' மனிதச் சங்கிலிப் பேரணி

## ஒன்றரை லட்சம் பேர் கலந்துகொண்டனர்

மொன்றியல், மார்ச் 18

கனடா மொன்றியலில் கியூபெக் தமிழ் மாணவர் சமூகமும் கியூபெக் தமிழர் சமூகமும் இணைந்து மாபெரும் உரிமைப்போர் மனிதச் சங்கிலிப் பேரணி ஒன்றை நடத்தினார்கள்.

மொன்றியல் கியூபெக் நகர மத்தியில் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு ஆரம்பமான இப்பேரணி 6 மணியளவில் முடிவடைந்தது.

இப்பேரணியில் ஒன்றரை லட்சம் மக்கள் பால், வயது வேறுபாடின்றி கலந்துகொண்டதோடு எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை யும் சுயநிர்ணய உரிமையையும் விடுதலை இயக்கத்தையும் அங்கீகரிக்கக். கோரியும் உடனடியாக யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழ் இனப் படுகொலையை நிறுத்தி வன்னி வாழ் மக்களின் அத்தியாவசிய தேவையான உணவு, மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் கோசமிட்டு இப்பேரணியை நடத்தினார்கள்.

இம் மனித சங்கிலிப் பேரணியில் பங்குபற்றிய பெருமளவிலான மாணவர்கள் 'நமக்கு வேண்டும் தமிழீழம்' ஆக்ரோசமாகக் குரலெழுப்பினர்.

அத்துடன் 'நமக்கு தமிழீழமே வேண்டும்', 'தமிழினப்படுகொலையை நிறுத்து', 'கொத்தணிக் குண்டுகளை வீசாதே' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளும் எறிகணை வீச்சில் சிக்குண்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கும் குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பெண்களின் புகைப்படங்களை தாங்கி நின்றனர்.

இவ் உரிமைப்போரானது சுவிஸ் பிரேசில் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி
### சிவகுமார் வளர்மதி

வையகம்: 28.04.1978 வானகம்: 02.02.2009

மதி! மதி!! மதி!!! என் உயிர்மதி
எங்கள் தெய்வமதி
துயரக் கடலில் எமைத்தூக்கி எறிந்துவிட்டு
காலன் இட்ட கட்டளையை
காப்பாற்ற வேண்டுமென்று
கண்காணாத தேசத்திற்கு காற்றாய் பறந்ததேனோ?
உங்கள் பிரிவால் என் உயிரை இழந்து ஏங்கித்தவிக்கின்றேன்
கள்ளமில்லாத புன்சிரிப்பும் கனிவான பார்வையும்
அன்பு கனிந்த பேச்சையும் என் கண்முன் நிலைக்க விட்டு
சிவன்பாதம் சென்றீரோ? - போதும் இவ்
வாழ்வேன ஓய்வெடுத்துக் கொண்டீரோ?
ஒருமனதாய் இறைஞ்சுகிறோம் நாம்.

02.02.2009 அன்று அமரத்துவம் அடைந்த எனது அன்பு மனைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (18.03.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றைய தினம் வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நொச்சியம்பதி வீதி,
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுடன்:
வை.சிவகுமார் (கணவர்).

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுதீசன் யாழினி



வவுனியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதீசன் யாழினி நேற்று (17.03.2009) செவ்வாய்க் கிழமை காலமானார்.

A B Ú ô I w I Û B ( Union Assurance Vavuniya) அன்பு மனைவியும் சுப்பிரமணியம்- ரூபவதி தம்பதியரின் அன்பு மகளும் நயினாதீவைச் சேர்ந்த அமரர் பத்மநாதன் மற்றும் இந்திராவதி தம்பதியரின் அன்பு மருமகளும் விஜிதா, சுகந்தன் , வசந்தன், ஜீஷதா, நிரஞ்சனா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆதீசன் (ரெலிக்கொம், வவுனியா), சிவேஜன் (பிரான்ஸ்), கேதீசன், துரைசிங்கம், வாசனா, சந்திரகலா, ரகு, ரவி, பிருந்தா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2009) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பெ.திருநாவுக்கரசு (நயினாதீவு)
பெ.ஜெயபாலசிங்கம்
கூட்டுவான் உப தபால் அலுவலகம்.
26/22, வளாக வீதி, திருநெல்வேலி.

6ஆம் ஒழுங்கை,
கோவில் புதுக்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2094

### திருமதி நாகலிங்கம் விசாலாட்சி



வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5/2, முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் விசாலாட்சி 16.03.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் லோகலீலாவதி (காலி), சுந்தரலிங்கம் (இளைப்பாறிய இ.போ.ச. உத்தியோகத்தர், காரைநகர் சாலை), மனோரஞ்சிதம்(கனடா), இரஞ்சிதமலர்(திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), விஜயராஜா (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன், செல்வி. ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் சுந்தரம்பிள்ளை (காலி வர்த்தகர்), சறோஜினிதேவி (கிளிநொச்சி), நவரத்தினம் (சவுதி), மோகனேஸ்வரன் (நூலகம், யாழ்.பல்கலைக்கழகம்), ஆகியோரின் பாசமிகு மாமியும் நாகரூபன்(ஜேர்மனி), நாகவேணி(ஆசிரியை, திவிதுவர. த.வித்தியாலயம், காலி), தர்சினி, நாகசொரூபன், நிஷாந்தினி, வினோதினி(சுவிஸ்), சிவானி( 3ஆம் வருட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), அகிலா, அம்பிகைவாசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), லோகேஸ்வரன் (ஆசிரியர்), கிருஷ்ணகாந்தி (ஆசிரியை), கதீஸ்வரன், தாரணி (கனடா), நவநீதன் (பொறியியலாளர், அமெரிக்கா), தமிழினி (வைத்தியர், கண்டி போதனா வைத்தியசாலை), சோபிதன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (18.03.2009) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நா.மோகனேஸ்வரன்,
இல.5/2, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி, நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## மேலும் 50 குடும்பங்கள் யாழ்ப்பாணம் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 18

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி வந்த 50 குடும்பங்களைச் சேர்ந்த 141 பேர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராணுவத்தினரால் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

வாகனங்களில் அழைத்துவரப்பட்ட இவர்கள் கைதடி ஆயுள்வேத மாணவர் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து வந்தவர்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நான்கு நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 13 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 110 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(1-207)

## மாதகல் சென்.யோசப் பரிசளிப்பு நாளை

சுன்னாகம், மார்ச் 18

மாதகல் சென்.யோசப் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினம், பரிசளிப்பு விழா, வளனார் சஞ்சிகை வெளியீட்டு விழா ஆகியன நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அதிபர் வி.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டப் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

'வளனார்' சஞ்சிகை நூலின் வெளியீட்டுரையை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியர் சு.ஸ்ரீகுமரனும், நூல் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.விஜயகுமாரும் நிகழ்த்துவர்.

(1-38)


**BIT**

விரிவுரைகள் ஆரம்பம்

Semester 1 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான Semester 2 விரிவுரைகள் எதிர்வரும் 21.03.2009 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

Director
Institute of Informatics Studies (IIS)
#100 Clock Tower Road, Jaffna
T.P. 0212222831


### தவறிவிட்டது

திருமதி தேவகாந்தி ஞானசூரியன் என்பவருடைய (566443201 V) இலக்கமுடைய தே.அ. அட்டை நாச்சியம்மன் வீதிக்கும் தட்டாதெருச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யா/பெரியபுலம் ம.வி.யில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே. 021 222 3446

(83611)

### பசுப்பால் வழங்க ஏற்பாடு

தென்மராட்சிப்பிரதேசத்தில் சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் 2 வயது தொடக்கம் 5 வயது வரையான இனங்காணப்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக தினமும் பால் வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகத்தினால்மேற்கொள்ளப்படவிருந்த இந்தச் செயற்திட்டத்துக்குசாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தினால்பால் வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தில் 2 ஆயிரத்து 400 பிள்ளைகள் நன்மையடையவுள்ளதால் தினமும் 400 லீற்றர் பால் தேவைப்படுவதாகவும், பால் உற்பத்தியாளர்கள் வழங்கப்படும் பாலின் அளவு [illegible] தலைவர் அறிவித்துள்ளார். (1-207)


தென்மராட்சி கிழக்கு அரிமாக் கழகத்தின் செயற்றிட்ட வளர்ச்சி நிதிக்காக விற்பனை செய்யப்பட்ட அதிஸ்டலாபச்சீட்டு

**குலுக்கலின் முடிவுகள் வருமாறு**

பரிசில் பெறும் இலக்கங்கள்

*1 ஆம் பரிசு - 1932*
*2 ஆம் பரிசு - 2849*
*3 ஆம் பரிசு - 2049*

*ஆறுதல் பரிசுகள்- 2169, 1763, 0138, 0729, 1855, 0787, 2833, 2940, 1141, 2385 பரிசில்களை கண்டி வீதி, கொடிகாமத்தில் உள்ள சின்னையா களஞ்சியத்தில் ரிக்கற்றை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.*

செயலாளர்.


## கண்ணீர் அஞ்சலி



*நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட, வேலணைப் பிரதேச செயலகத்தின் ஜே/35 நயினாதீவு மத்தி கிராம அலுவலர்பிரிவில் நீண்ட காலமாகச் சேவையாற்றி கடந்த 14.03.2009 இல் சிவபதமடைந்த ஓய்வுபெற்ற கிராம அலுவலர்*

### அமரர் நாகநாதி கந்தசாமி

*அவர்களின் ஆத்மா சாந்தியடையவும், அவர்தம் குடும்பத்தார் ஆறுதல் அடையவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றோம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும் கிராம அலுவலர்கள்,
பிரதேச செயலகம், வேலணை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
27.07.1940



உதிர்வு
30.03.2008

### அமரர் முத்து சிவலிங்கம்
(முன்னாள் தர்மகர்த்தா - ஸ்ரீ விருகத்தி விநாயகர் ஆலயம்)

திதி: 18.03.2009

நீங்கள் நீக்கமற நிறைந்திருந்த இடங்கள்
எல்லாம் செயலற்றுக் கிடக்குதையா!
நீங்கள் இல்லாத பொது வைபவங்கள்
திருவிழாக்கள் இவற்றை நினைத்துப்பார்க்க முடியாதையா
உங்கள் வெற்றிடத்தை
நிரப்புவதற்கு யார் வருவார் இனி?
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

N.ஸ்ரீ (மருமகன்) இல 303, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பர் தில்லைநாதன்



(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பர் தில்லைநாதன் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்) நேற்று (17.03.2009) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பர் - யோகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா - பாக்கியம் தம்பதியரின் அருமை மருமகனும், தில்லைராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், கணேசமூர்த்தியின் (கைதடி அஞ்சலக ஊழியர்) வளர்ப்புத் தந்தையும், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் சிவராசா, இராஜசிங்கம், காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சடாச்சரத்தின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.03.2009) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

தகவல்:
மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்பியப் படுகொலையின்போது விட்ட தவறை ஐ.நா. இலங்கைத் தமிழர் விடயத்திலும் செய்கிறது

## குற்றஞ்சாட்டுகிறார் சர்வதேச சட்ட நிபுணர்

கொழும்பு,மார்ச்18

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் இன அழிப்புப் போருக்கு உடந்தையாக இருப்பதன் மூலம் ஐ.நா. சபையானது தனது சரித்திரத்திலேயே மீண்டும் ஒரு வெட்கம் அற்ற அகௌரவமான குளறுபடியைச் செய்துகொண்டிருக்கிறது என்று சர்வதேச சட்ட வல்லுநரும் இல்லியோனிஸ் சட்ட பல்கலைக்கழகப் பேராசிரியருமான பிரான்சிஸ் பொய்ல் கூறியிருக்கிறார்.

1995ஆம் ஆண்டில் சேர்பிய இனப்படுகொலைகளின்போது 8500 முஸ்லிம் ஆண்களும், சிறு பையன்களும் கொல்லப்பட்டனர். அப்போது 1948ஆம் ஆண்டு இன அழிப்புக்கு எதிரான ஐ.நா. ஒப்பந்தத்துக்கு மாறாக ஐ.நா. அந்த படுகொலைகளைக் கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டது. அதே தவறைத்தான் இன்று இலங்கை விடயத்திலும் ஐ.நா. மீண்டும் செய்துகொண்டிருக்கிறது என்று பேராசிரியர் பொய்ல் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்தக் கொடுமை நிகழ்ந்தபொழுது ஸ்ரெப்ரெனிக்கா ஐ.நாவுக்கு பாரப்படுத்தப்பட்ட நாடாகவே இருந்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் பாதுகாப்பில் அப்பிரதேசம் இருந்து வந்தது. அந்தச் சமயத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் சேர்பியன் இனப்படுகொலைகளிலிருந்து பொஸ்னியன்களைக் காப்பாற்ற ஒரு விரலைக் கூட உயர்த்துவதற்கு முன்வரவில்லை என்று பேராசிரியர் பொய்ல் கூறியுள்ளார்.

இலங்கையில் மக்கள் தங்கியுள்ள முகாம்களை நடத்துவதற்கு ஐ.நா. நிதி வழங்குவதாக வெளிவந்துள்ள செய்திகள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதையடுத்துப் பேராசிரியர் பொய்ல் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மோதல் நடக்கும் இடங்களிலிருந்து வெளியேறும் மக்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள முகாம்களுக்குச் சர்வதேச நிதியங்கள் பயன்படுத்தப்படுமா என்று கடந்த இரண்டு வாரங்களாக ஐ.நாவிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிவந்துள்ளார்கள். தடுத்துவைக்கப்படும் மக்கள் 2009 இறுதிவரை அல்லது அதற்கு மேலும் அங்கு வைத்திருக்கப்படுவார்கள் என்று கருதப்படுகின்றது.

இடைத்தங்கல் முகாம்கள் அல்லது அரைவாசி நிரந்தர முகாம்களுக்கு நிதி வழங்க ஐ.நா. முன்வந்துள்ளது. நிதி வழங்கலில் இந்த இரண்டுக்கும் எதுவித தொடர்பும் இருக்கப்போவதில்லை என்றார் பேராசிரியர் பொய்ல்.

இலங்கையில் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் போர்நிறுத்தம் ஒன்றுக்கு வராவிட்டால் பொதுமக்களின் அழிவு மிக மோசமான அவலநிலைக்கு வந்துவிடும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிகை விடுத்திருந்தார். இலங்கை அரசாங்கம் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகள் போர் குற்றங்களைப் புரிந்திருக்கும் சாத்தியமிருப்பதாக ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்தார்.

பொதுமக்களுக்காக அமைக்கப்[illegible] பாதுகாப்பு வலயங்களுக்குள் இல[illegible]க இராணுவம் மீண்டும் மீண்டும் ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளது. நம்பத் தகுந்த பல வட்டாரங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி 2,800 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 7,000 பேர் வரை காயமுற்றுள்ளார்கள் என்று அவ[illegible] கூறியிருந்தார். ([illegible]ப)

## அச்சுவேலி வைத்தியசாலையில் புதிய மாடிக் கட்டடம் திறப்பு

அச்சுவேலி,மார்ச்18

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் புதிய மாடிக் கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.விமலேந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவில் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் பிரதம விருந்[illegible]ராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்துவைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அ.ஏ.ஞானசோதி, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (203-11)

# யுத்த நடவடிக்கைகளை பாராட்டினாராம் ஹிலாரி

## அமைச்சர் போ[illegible]கொல்லாகம கூறுகிறார்

கொழும்பு,[illegible]18

கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் யுத்த நிறுத்தம் பற்றி எதுவும் பேசவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம கூறினார்.

ஞாயிறன்று நுகேகொடையில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-.

கடந்த வாரம் தொலைபேசி மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் உரையாடிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் எமது யுத்த நடவடிக்கையைப் பாராட்டினார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் இந்த யுத்தத்தின் வெற்றிக்குரியவர் மஹிந்த ராஜபக்ஷதான் என்று அவர் கூறினார். எமது யுத்த நடவடிக்கையில் அவர் முழுத் திருப்தியடைந்துள்ளார்.

ஆனால், அவர் புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்யுமாறு எம்மிடம் கோரிக்கை எதையும் விடுக்கவில்லை.

அத்தோடு, எமது அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்தார் - என்றார். (சி)

# சம்பளக் கொடுப்பனவு தொடர்பான விவரக்கூற்று யாழ்.வலய ஊழியர்களுக்கு மாதாந்தம் அனுப்பிவைப்பு

அச்சுவேலி,மார்ச்18

யாழ்.கல்வி வலயத்தில் மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவு தொடர்பான விவரக் கூற்று தனித்தனியாக மாதாந்தம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள், ஊழியர்களுக்குச் சம்பளப்பட்டியலுடன் அனுப்பிவைக்கப்படுகின்றன.

யாழ்.கல்வி வலயச் சம்பளக் கிளையினால் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

சம்பளம் பெறும் சம்பந்தப்பட்டவரின் சம்பளம், வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் கொடுப்பனவு, சம்பளத்தில் கழித்தெடுக்கப்படும் விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியம், பெற்றுக்கொண்ட கடன்கள் மற்றும் கழிவுகள் குறித்த கடன் தொடர்பாகச் செலுத்தவேண்டிய தொகை மற்றும் விவரங்கள் அடங்கிய பூரணமான விவரக் கூற்று கணனிமயப்படுத்தப்பட்ட அறிக்கை[illegible]க வழங்கப்படுகின்றது.

இதுதொடர்பாக யாழ்.கல்வி வலய கணக்காளர் கே.கமலரூபன் கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ்.கல்வி வலயத்தின் கீழ் மாதாந்தச் சம்பளம் பெறும் ஆசிரியர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் பெப்ரவரி மாதத்தில் இருந்து சம்பளம் தொடர்பான விவரக்குறிப்பு வழங்கப்படுகின்றது.

இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கோவைப்படுத்திப் பாதுகாப்பாக வைத்திருந்தால் தங்களது சம்பளக் கொடுப்பனவில் கிடைக்கின்ற தொகை, கழிக்கப்பட்ட தொகை என்பனவற்றையும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய தெளிவின்மையையும் சீர் செய்யமுடியும்.

இந்த விவரக்குறிப்புத் தொடர்ந்து எதிர்காலத்தில் மாதாந்தம் வழங்கப்படும்.

இதனைக் குறித்த மாதத்தில் அதிபர்கள், சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள், ஊழியர்களிடம் கையளிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும் - எனத் தெரிவித்தார். (203-11)

# புல்லுக்குளத்தில் நுளம்புப் பெருக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

யாழ்.முனீஸ்வரன் வீதியில் உள்ள புல்லுக்குளத்தில் புல் அடர்ந்து காணப்படுகின்றது.

குளத்தின் கரைப்பகுதிகளிலும் அடர்ந்து, வளர்ந்த நிலையில் புற்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு புற்கள் அடர்ந்து, வளர்ந்து காணப்படுவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் அப்பகுதிகளில் தொற்று நோய்கள் பரவும் நிலையும் தோன்றியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டோர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-224)

# இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3இல் உள்ளோரை தரம் உயர்த்துவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை

அச்சுவேலி,மார்ச்18

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3இல் உள்ளவர்களை வகுப்பு 2: II இற்குப் பதவி உயர்த்துவதற்குக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த வகையில் அதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3இல் 2008.12.31இற்கு முன்னர் 3 வருடங்களைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 பதிவியுயர்வு 2000.08.04ஆம் திகதியில் வழங்கப்பட்டது.

பதில் அதிபர்களாகச் சேவையாற்றியவர்களுக்கும் அடுத்த கட்டமாகப் போட்டிப் பரீட்சை மூலம் வங்கப்ப[illegible]

2002.01.01ஆம் திகதி முத[illegible] இந்த இரண்டு வகையான நியமனங்கள[illegible] இருப்பவர்கள் பதவி உயர்வு பெறுதவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3இல் முன்னரே கோரப்பட்டிருந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் கடந்த மாதம் குறிப்பிடத்தக்க தொகையினருக்கு அதிபர் சேவை 2:II பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

இந்த வகையில் 160இற்கு மேற்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை அதிபர் சேவை 3இல் இருப்பவர்களை 2:IIஇற்குப் பதவி உயர்த்துவது தொடர்பான விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரம் அரச சார்பு செய்திப் பத்திரிகைகளில் இந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது. (203-11)

# அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் சீர் செய்யப்படும்

## மாநகர சபை ஆணையாளர் தெரிவிப்பு

நல்லூர்,மார்ச்18

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற நீர் விநியோகச் சேவைகள் புனரமைக்கப்படும்போது அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளுக்கான மினி குடிதண்ணீர் விநியோகச் சேவைகளிலும் திருத்தங்கள் செய்யப்படும் என மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகத்தில் குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீர் விநியோகச் சேவை குறித்து ஆணையாளர்களுக்குத் தெரிவித்தனர்.

இந்தக் குறைபாடுகள் குறித்து அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் குழாய்நீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்கப்படும்போது இந்த விடயமும் கவனத்தில் கொள்ளப்படும் என ஆணையாளர் குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குத் தெரிவித்தார். (203-111)

# பிரதம தபாலகத்திற்கு புதிய பெயர்ப்பலகை

யாழ்.பிரதம தபாலகத்திற்கான புதிய பெயர்ப்பலகை ஒன்று தபாலகத்திற்கு முன்பாக நடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தபாலகத்திற்கென பெயர்ப்பலகை இல்லாமையால் பொது மக்கள் சிலர் தபாலகம் இருக்கும் இடம் தெரியாமல் சிரமப்பட்டு வந்தனர்.

குறிப்பிட்ட தபாலகத்தின் பெயர் கட்டடப் பகுதியிலேயே முன்னர் எழுதப்பட்டிருந்தது. (203-224)



யாழ்.மாவட்ட சமூகப் பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டப் பயனாளியான யாழ்.பிரதேச பிரிவுக்குட்பட்ட மகாதேவா மனோகரனின் மரணப் பணிக்கொடை யாழ்.செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் அரச அதிபர் கே.கணேஷ் பயனாளியின் தந்தையான மகாதேவாவிடம் காசோலையை வழங்குவதையும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பயனாளியின் தாய் எம்.நாகேஸ்வரியிடம் காசோலையைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். யாழ்.மாவட்டப் பாதுகாப்புச் சபையின் இணைப்பதிகாரி பி.பிரதீபனும் படத்தில் காணப்படுகின்றார். (௯)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.கோவின் புதிய விற்பனைக் கிளை

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.பல்கலைக்கழகத்தில் யாழ்.கோவின் புதிய விற்பனைக் கிளை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் குளிரூட்டப்பட்ட பால் பைக்கற், ஐஸ்கிறீம், யோக்கட் மற்றும் காய்ச்சிய பசுப்பால் என்பனவற்றை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை விற்பனை செய்து வருகின்றது.

இந்த விற்பனை நிலையம் யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கட்டடத்திற்கு அருகிலுள்ள கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

(204-119)

## இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மக்கள் அனாதைகள் அல்லர்; அவர்கள் எங்கள் உறவுகளே

### உதவ முன்வருமாறு பேராசிரியர் சிற்றம்பலம் வேண்டுகோள்

நல்லூர், மார்ச் 18

இன்னல்களுக்கு உள்ளாகி இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் அனாதைகளல்லர். எங்கள் உறவுகளே. முடிந்தவரை உதவுவோம்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்து அமைப்புகள் ஒன்றியத்தினால் இந்த மக்களுக்கென வழங்கப்பட்ட உதவிப் பொருள்களை யாழ்.அரச அதிபர் கே. கணேஷிடம் கையளித்த நிகழ்வில் உரையாற்றுகையில் பேராசிரியர் சிற்றம்பலம் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாங்கள் ஆலயங்களுடன் மட்டுமே நிற்கின்றோம். அந்த நிலையை விட்டு சமூகப் பிரச்சினைகளில் ஈடுபட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலுப்படுத்தக் கூடியதாக இந்த அமைப்பு செயற்படும்.

எம்மத்தியில் புத்தி ஜீவிகள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள் என பலதரப்பட்ட துறைசார்ந்த மக்கள் இருக்கின்றார்கள்.

அவர்களின் உதவியுடன் பாதிப்புக்குள்ளான எங்களது உறவுகளுக்கு தொடர்ந்தும் உதவுவோம்.

வசதியுடன் வாழ்ந்தவர்கள் அவர்கள். அனாதைகளல்லர்.

மனோரீதியாக பாதிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு நாம் உறுதுணையாக இருப்பது மன நிம்மதியை ஓரளவாவது கொடுக்கும்- என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் உரையாற்றுகையில்:

மக்களுக்கு உதவவேண்டும் என்பதற்காகவே உருவாக்கப்பட்டது இந்த அமைப்பு.

திக்கற்ற நிலையில் உள்ள எமது உறவுகளின் துயரங்களை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்.

இந்து சமய மக்கள் அமைப்புக்கள் துயரப்படும் மக்களுக்கு முடிந்த உதவிகளை வழங்க முன்வருவதில்லை என்ற கருத்து முற்றிலும் தவறானது.

இந்துக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தங்களாலான உதவிகள் அனைத்தையும் வழங்கியே வருகின்றனர்.

ஒரு பலமான அமைப்பின் மூலம் இந்த உதவிகள் செல்லாத நிலையிலேயே தவறான கருத்துக்கள் ஏற்படுகின்றன.

இந்து அமைப்புக்கள் ஒன்றியம் பாதிப்பு உள்ளாகும் மக்களுக்குத் தேவைப்படும் உதவிகளை எமது மக்களின் முழு ஆதரவுடன் நிறைவேற்றக் கூடியதான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும்- என்றார்.

(203-111)

## கோப்பாய் வைத்தியசாலை வர்ணம் பூசிப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை வெள்ளை வர்ணம் அடிக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகிறது.

வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஆகியன இணைந்து வர்ணம் பூசும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

(203-224)


COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road, Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2009 80%OFF

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Microsoft Office | 3 Months | | 1500/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | ~~10000~~ | 2000/= |
| Diploma in Web Page Designing | 3 Months | ~~10750~~ | 2150/= |
| Diploma in Graphic Designing | 4 Months | ~~10750~~ | 2150/= |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10000~~ | 2000/= |
| Diploma in Auto CAD | 3 Months | ~~10000~~ | 2000/= |
| Diploma in Accounting Package | 3 Months | ~~10750~~ | 2150/= |
| Diploma in Computer Science | 4 Months | ~~10750~~ | 2150/= |
| Honors Diploma in Computer Science | 3 Months | ~~13000~~ | 2600/= |

50% Off Advance Courses

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும் சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.

March 30 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

| | யாழ்நகரில் ஆரம்பம் | நெல்லியடியில் ஆரம்பம் |
|---|---|---|
| Batch I: | 20/03/2009 -09AM | 19/03/2009 -09AM |
| Batch II: | 21/03/2009 -09AM | 21/03/2009 -09AM |
| Batch III: | 22/03/2009 -09AM | 22/03/2009 -09AM |
| Batch IV: | 25/03/2009 -09AM | 24/03/2009 -09AM |


## நீங்காத நினைவில் ஓராண்டு...





அமரர் கந்தையா மகாலிங்கம்
மலர்வு: 04.01.1933 உதிர்வு: 01.03.2008

திருமதி மகாலிங்கம் புவனேஸ்வரி
மலர்வு: 09.01.1944 உதிர்வு: 30.03.2008

திதி: அட்டமி

அப்பா, அம்மா நீங்கள் கூப்பிடும்
ஒலி கேட்கிறதே!
உங்கள் உடைகள்
எம்மை உருக்குகின்றதே!
நீங்கள் விரும்பிய உணவு
எமக்குக் கசக்குகின்றதே!
உங்கள் பஞ்சணைகள்
எம்மை எரிக்கின்றதே!

திதி: நவமி

நித்தமும் உங்கள் வதனங்கள்
எமது நெஞ்சத்தைத் தழுவுகின்றன!
ஆண்டு ஒன்று ஆகியும்
நீங்கள் எங்களுடன் இருக்கும் பிரமை
ஆண்டவன் சித்தம் இதுவென்றால்
நாம் அதை வெல்ல முடியுமா?
இதுதான் வாழ்க்கை நியதியென
எண்ண முடியவில்லையே அப்பா, அம்மா.

உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பாசத்துடன்: பிள்ளைகள்,
அன்புடன்: மருமக்கள்,
கொஞ்சிக்குலாவும்: பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ-9 பாதைத் திறப்பும் மக்கள் பயணமும்

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தென்னிலங்கையையும் தரைவழியாக இணைக்கின்ற வழித்தடமாக மட்டும் அமையவில்லை ஏ-9 பாதை. சிலசமயங்களில் இரு பகுதி மக்களதும் கலை, கலாசார, பண்பாட்டுத் துறைகளின் இணைப்புப் பாலமாகவும் இருந்துள்ளது - இருக்கவும் முடியும்.

நாட்டில் ஏற்பட்ட இரு தரப்பு கடும் மோதல்களின் காரணமாக ரயில் சேவைகள் குறிப்பிட்ட நகரங்களுடன் முடங்கிப்போன காலத்தில் ஏ-9 பாதையே குடாநாட்டை ஏனைய பகுதிகளுடன் இணைப்பதாய் இருந்துவந்தது. மோதல்கள் விரிவடைந்து அப்பாதையும் மூடப்பட்டுவிட்ட நிலையில் குடாநாட்டு மக்கள் தமது முக்கிய தேவைகளுக்குக் கொழும்புத் தலைநகருக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. அதனால் 'கிளாலி' கடற்பாதை அவர்களுக்குக் கைகொடுத்து உதவியது.

முக்கிய அத்தியாவசியப் பொருள்களைக் கடல்மார்க்கமாகத் திருகோணமலை வழியாகக் கொண்டுவரவும் தென்னிலங்கைக்குக் கொண்டுபோகவும் கூடியதாக இருந்தபோதிலும் பல்வேறு இடைஞ்சல்களையும் இன்னல்களையும் எதிர்கொண்டும் - சிலசமயங்களில் உயிர் அச்சுறுத்தல்களைக் கூட பொருட்படுத்தாமல் குடாநாட்டு மக்கள் கிளாலி வழியாகச் சென்று வந்தார்கள்.

கொழும்பிலுள்ள உறவுகளைப் பார்க்க, அங்கே தொழில், மருத்துவம் மற்றும் இது போன்ற இன்னோரன்ன காரியங்களைக் கவனிப்பதற்கு நம்மக்கள் தலைநகருக்குப் போகவேண்டிய கட்டாயம் இருந்தது. குறிப்பாகச் சொல்லப்போனால் இம்மக்கள் வெளிநாடுகளில் வாழ்ந்த தம் நெருங்கிய உறவுகளுடன் தொலைபேசித் தொடர்புகளை மேற்கொள்ளவும் கூட கொழும்புக்குச் செல்லவேண்டிய நிலை இருந்தது. அதனால் வசதி படைத்தவர்கள் விமானப் பயணத்தையும் கப்பல் பயணத்தையும் பயன்படுத்திக்கொண்டார்கள். வசதியற்றவர்கள் பலத்த சிக்கல்களுக்கிடையில் உயிரைத் திரணமாக மதித்து கொழும்புக்குச் சென்ற காலம் இருந்தது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2002ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏ-9 பாதை திறக்கப்பட்டது.

குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள், மருத்துவ, விவசாயப் பொருள்கள் போன்றவற்றை இலகுவாக எடுத்துவரமுடிந்தது. போக்குவரத்துத் தடைப்பட்ட காலத்தில் தட்டுப்பாட்டுக்குள்ளான பொருள்கள் யாவும் தாராளமாகக் கிடைத்தன. பொருள்களின் விலைகளும் மளமளவென சரிந்தன. மிக முக்கிய பொருள்களைக் கொழும்பு விலைக்கே சிலசமயம் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. மக்கள் போக்குவரத்தும் இலகுவாயிற்று. போக்குவரத்தில் இடைநடுவில் சிலபல இடையூறுகளையும் கெடுபிடிகளையும் எதிர்நோக்க நேர்ந்தாலும் மக்கள் கொழும்புக்கும் ஏனைய பகுதிகளுக்கும் தம் தேவைகளுக்காக இலகுவாக மகிழ்வாகப் போய் வந்தார்கள். ஆனால்...

2006ஆம் ஆண்டு அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் விரிவடைந்து ஏ-9 பாதை முற்றுமுழுதாக மூடப்பட்டுவிட்டது. பழையபடி மக்கள் போக்குவரத்துத் தடைபட்டுவிட்டது. பொருள்களின் வரத்து நின்றுவிட்டது. இந்த நிலைமையில் குடாநாட்டில் பொருள் தட்டுப்பாடும் விலைகளும் மளமளவென்று அதிகரித்தன. உள்ளூர் உற்பத்திப் பொருள்களும் ஏற்றுமதியாகாமல் தேங்கிவிட்டன. விவசாயிகள் பெரும் திண்டாட்டங்களுக்கு உள்ளானார்கள். இவைகளைச் சீர்செய்வதற்கு அதிகாரிகள் கடல்மார்க்கமாகப் பொருள்களைக் கொண்டுவரவும் மக்கள் பயணம் செய்யவும் ஏற்பாடு செய்தனர்.

ஆனால் பொருள் தட்டுப்பாடு எதிர்பார்த்த அளவில் குறையவில்லை. தட்டுப்பாடு குறைந்தாலும் விலைவாசிகளின் இறங்குமுகத்தையே காணமுடியவில்லை.

தட்டுப்பாட்டின்போது பொருள் விலைகளை அதிகரித்தவர்கள், தட்டுப்பாடு நீங்கிய பிறகும் அவைகளின் விலைகளில் குறைப்புச் செய்ய மனம் வைக்கவில்லை.

உணவுக் கடைகளில் தேநீர், பலகாரங்களின் விலைகள் இன்னமும் குறைக்கப்படவில்லை. சில்லறைச் சாமான் கடைகளில் அரிசி, மா, சீனி, தேயிலை போன்ற பொருள்கள் தாராளமாகக் கிடைத்த போதிலும் விலைகள் ''மசியமாட்டேன்'' என்கின்றன.

போர் நடந்தாலோ நடக்காவிட்டாலோ ஏ-9 பாதை எப்பொழுதுமே திறந்திருக்க வேண்டிய அவசியம் இப்பொழுது எல்லோராலுமே உணரப்பட்டிருக்கவேண்டும். இப்பாதை விஷேட பாதுகாப்புக்குரிய பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு சர்வதேச கண்காணிப்புக் கும் பாதுகாப்புக் கும் உள்ளாக்கப்படுமானால் அது மக்கள் எல்லோராலும் வரவேற்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இப்பொழுது ஏ-9 பாதை ஊடாக பொருள்கள் தருவிக்கப்படவும் இங்கிருந்து எடுத்துச்செல்லப்படவும் ஏற்பாடுகள் செய்யப்படுவதை அறிகின்றோம். இப்பாதையைத் தனியார் வர்த்தகர்களால் சரியாகப் பயன்படுத்தப்படும்போது நிச்சயம் குடாநாட்டில் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கும். விலைகள் பழையபடி குறையும். மக்கள் பயணமும் சுமுகமாக அமையும் என்று எதிர்பார்ப்போம்.

**நெற்றிக்கண்ணன்**

## பலாங்கொடையில் விபத்து பயணிகள் 29 பேர் காயம்

கொழும்பு,மார்ச் 18

பலாங்கொடை, குடுகெல பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 29 பேர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடுகெல வளைவில் பஸ் தடம்புரண்டது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் 6 பேர் பாடசாலை மாணவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் பலாங்கொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (அ-சி)

## அம்பாறையில் மோதல்

கொழும்பு,மார்ச்18

அம்பாறை, பானம பகுதியில் ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளின் அணி ஒன்றுக்கும் விசேட அதிரடிப்படைக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது எனத் தேசியப் பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வேரகமப் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படைத் தளத்தில் இருந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அந்த நிலையம் தெரிவித்தது.

இச்சம்பவத்தை அடுத்து விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகளின் வெடிபொருள்கள் மீட்கப்பட்டன என்றும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் விடுத்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-சி)

# அனைத்துக் கட்சி குழு தீர்வை முன்வைத்தால் ஐ.தே.கட்சி தனது யோசனைகளை வைக்கும்

## ரவி கருணாநாயக்க எம்.பி. கூறுகிறார்



கொழும்பு,மார்ச்18

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினர் தமது அரசியல் தீர்வின் மாதிரியை வெளியிட்டால் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி தனது யோசனையை முன்வைக்கும்.

- இவ்வாறு கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் பங்குகொள்வதில் அர்த்தமில்லை என்று உணர்ந்ததன் பின்னரே அதில் தமது கட்சி கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்தது எனவும் அவர் மேலும் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு -

ஜனாதிபதி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை நியமித்ததும் ஐக்கிய தேசியக் கட்சியும் அதில் இணைந்துகொண்டது. அத்துடன் எமது கருத்துக்களையும் நாம் தெரிவித்து வந்ததுடன் குழுவின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பும் வழங்கி வந்தோம்.

பின்னர் பிரதிநிதிகள் குழுவில் கலந்துகொள்வதில் அர்த்தம் இல்லை என்பதை நாம் உணர்ந்துகொண்டோம். அதன் பின்னரே அதில் கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்தோம்.

காரணம் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் எந்தவிதமான ஆக்கபூர்வமான விடயங்களும் இடம்பெறவில்லை. எனவே அதன் கூட்டங்களில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை என்பதை ஐக்கிய தேசிய கட்சி உணர்ந்துகொண்டது. எனினும் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு இனப்பிரச்சினை தொடர்பில் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தால் ஐக்கிய தேசிய கட்சி தனது ஆலோசனையை முன்வைக்கும்.

தமிழ் மக்களுக்குத் தீர்வாக அரசு எதனைக் கொடுக்கப் போகின்றது என்பதை நாங்கள் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். அதன்பின்னர் எமது யோசனைகளை நாமும் முன்வைப்போம். இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஆரம்பத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி தெளிவான நிலைப்பாட்டில் இருந்து வருகின்றது. அரசின் தீர்வு முறைமை எவ்வாறு அமையும் என்பதனையே நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் - என்றார். (அ-சி)

# மாத்தறை குண்டுவெடிப்பு சம்பவம்: 75 பேரிடம் இதுவரை விசாரணை

கொழும்பு,மார்ச்18

மாத்தறை கொடப்பிட்டிய குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக இதுவரை 75 பேருக்கும் அதிகமானவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணைக்குப் புறம்பாக கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று அந்த மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகள் பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அமைச்சர் மஹிந்த விஜேயசேகரவின் உடல்நிலை தேறி வருகின்றது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சரின் உடல்நிலை விசேடமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இச்சம்பவத்தில் காயமடைந்து மாத்தறை மற்றும் காலி ஆகிய இடங்களில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்களுள் சிலர் சிகிச்சை முடிந்து வீடுகளுக்குத் திரும்பிவிட்டனர் என்றும் சிலர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

# மேல்மாகாண சபை வேட்பாளர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்க ஏற்பாடு

கொழும்பு,மார்ச்18

மேல்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் விசேட அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

அதிகமான வேட்பாளர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விசேட அடையாள அட்டைகள் வேட்பாளர்களின் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருப்பதோடு வாக்கெடுப்பின் போது அவர்கள் எதுவித தடையுமின்றி வாக்குச்சாவடிகளுக்குச் சென்றுவரவும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளின் கையெழுத்துகளுடன், புகைப்படங்களுடன் கூடிய இந்த அடையாள அட்டைகள் அந்தந்த மாவட்ட வேட்பாளர்களுக்கு வழங்கப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மேல்மாகாணசபைத் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றைச் சேர்ந்த 2 ஆயிரத்து 378 பேர் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் அனைவருக்கும் இந்த விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. (அ-சி)



யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் [illegible] ஒரு அங்கமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 'சலங்கையும் சந்தமும்' என்னும் நட்சத்திரக் கலை விழா ஒன்று நடத்தப்பட்டது.

அந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கண்காட்சியின் போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் மாணவர்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் இ.ராகவன் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

கண்காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்களுடன் மாணவர்கள் காணப்படுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

## இராஜகோபுரம் அமைப்பு

பருத்தித்துறை, புலோலி பசுபதீஸ்வரர் (சிவன்) கோயில் மேற்கு வாசலில் அமைந்திருக்கும் வீரகத்திப் பிள்ளையார் வாசலில் புதியதொரு இராஜகோபுரம் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (203-236)

# வாசகர் திருமுகம்

## விளையாட்டுப் போட்டிகளில் இப்படி நடைபெறுவது சரியா?

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டம் 42 பாடசாலைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியானது விளையாட்டு விதிமுறைகளின்படி மாணவச் செல்வங்களுக்காகவே நடத்தப்படுகின்றது. அதிபர்களுக்காகவோ அன்றி ஆசிரியர்களுக்காகவோ நடத்தப்படுவதில்லை. எனவே அங்கு நடைபெறும் தவறுகளால் பாதிக்கப்படுவது அப்பாவி மாணவச் செல்வங்களேயாகும். கடந்த 06.03.2009 வெள்ளிக்கிழமை அன்று சண்டிலிப்பாய்க் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் 21 வயதின் கீழ் ஆண்கள் பிரிவிற்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டி நடைபெற்றது. 08 இற்குக் குறைவான போட்டியாளர்கள் சமுகமளித்தமையால் தெரிவுப்போட்டி இன்றி இறுதிப்போட்டியாக நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

தொடக்குநரின் சமிஞ்சையை தவறவிட்டமையால் ஒரு போட்டியாளர் ஓடாது விட்டுவிட்டார். மிகுதிபேர் மூலம் 1, 2, 3ஆம் நிலை வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அன்றைய தினப்போட்டிகள் யாவும் நிறைவுபெற்ற நேரத்தில் திடீர் அறிவிப்பு ஒன்று ஒலி பெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. 21 வயதின் கீழ் ஆண்கள் பிரிவிற்கான 200 மீற்றர் போட்டி இரத்துச்செய்யப்பட்டிருப்பதாகவும் அதற்கான போட்டி மீண்டும் அடுத்தநாள் காலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. போட்டியில் பங்குகொண்ட பாடசாலை மாணவர்களின் பொறுப்பாசிரியர்கள் ஏன் இரத்துச் செய்யப்பட்டது என வினாவியபோது தொடக்குநரின் தவறு என காரணம் கூறப்பட்டது.

இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் வருமாறு:

★ ஓடாது விட்ட மாணவன் பிரபல பாடசாலை மாணவன் என்பதால் மீண்டும் நடத்தப்படுவதாகப் பேசிக்கொள்ளப்பட்டது.

★ தொடக்குநரின் தவறு எனில் மற்றைய வீரர்களை முழுமையாக ஓடவிடாது திரும்ப அழைத்துப் போட்டியை மீண்டும் நடத்தியிருக்க வேண்டும்.

★ தீர்ப்பாளரால் முடிவு எடுக்கப்பட்டு 2 மணித்தியாலங்களின் பின்பு ஏன் ஒலி பெருக்கியில் இரத்துச் செய்யும் அறிவித்தல் விடுக்கப்பட வேண்டும்.

★ மறுநாள் 200மீ. போட்டி மீண்டும் நடத்தப்பட்டபோது ஓடாது விட்ட பிரபல பாடசாலையைச் சேர்ந்த அம்மாணவன் மட்டுமே பங்குபற்றி முதல் இடம் பெற்றமையும் ஏனைய மாணவர்கள் பங்குபற்றாமல் விட்டமையும் விசனத்துக்குரியது.

மாணவர்களுக்காக நடத்தப்படும் விளையாட்டுப்போட்டிகளில் இவ்வாறான குளறுபடிகள் இனி நடைபெறாவண்ணம் கல்விப்புலம் சார்ந்தோர் செயற்பட வேண்டும் என விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக
நக்கீரன்.

சண்டிலிப்பாய்.

## இன்றைய கல்விநிலை இருந்தவாறு

''உதயன்'' 08-03-2009 இல் வெளிவந்த 'ரியூட்டரிகளை மட்டும் நம்பிப் பாடசாலைக் கல்வி கை நழுவுகிறது' என்ற ''சத்தியன்'' வரைந்த கட்டுரை சகல கல்வியாளர்களுடைய கவனத்துக்கும் உரியது. ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கில் சம்பளம் பெற்றும் திருப்தியடையாமல் 'ரியூட்டறி'களில் சொற்ப தொகைக்காகத் தொண்டைவற்றக் கத்துகிறார்கள். மாணவர்கள் அதே ஆசிரியர்கள் பாடசாலயில் நன்றாகப் படிப்பிக்காமல் விடுவதை அறிந்தும் அவர்களிடம் ரியூட்டறிக்குப் போகாவிட்டால் 'புள்ளிக'ளைக் குறைத்துத் தண்டிப்பார்கள் என்று நினைக்கிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளை காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை அகற்றிவிட்டால் தாம் நிம்மதியாயிருக்கலாம் என்று நினைக்கிறார்கள் போலும். இளைஞரை நாள் முழுவதும் வீட்டில் காணமுடியாது.

மாணவன் ஒருவன் முதலில் விண்ணப்பம் ஒன்றை எழுத, படிவம் நிரப்ப விஷயம் அறிந்தவர்களை நாடுகிறான். நூற்றுக்கணக்கான பிள்ளைகள் உள்ள பெரிய பாடசாலையில் படித்து முடித்தவனுக்கு (முதல் முறைப் பரீட்சார்த்தி) படிவம் நிரப்பக்கூட உதவி செய்யாத பாடசாலை நிர்வாகமும், ஆசிரிய சமூகமும் ஏன் இருக்க வேண்டும்.

முதலாம் ஆண்டு முதல் பல்கலைக்கழகம்வரை ஆசிரியர்கள் மொழியறிவு குறைவுக்கு தங்கிழுள்ளவர்களைக் குறை சொல்கிறார்கள். முன்பள்ளியில் எழுத்துப் படிப்பிப்பது [illegible] கல்விக் கோட்பாட்டுக்குமாறு என்றால் எந்தமட்டத்தில் எழுத்தைப் பயிற்றித் திருத்துவது? 'நழுவிவிடும் குணம்' பட்டப்பின் படிப்பு நிலை வரை இருக்கிறது. மாணவருக்கு விரிவுரை மட்டும் நிகழ்த்தி விடுவதுடன் தம் கடமை சரி என முதுநிலை விரிவுரையாளர்கள் நினைக்கிறார்கள். இணைப்பாளர் மீதிச்சுமை முழுவதையும் சுமக்கட்டும் என விலகி விடுகிறார்கள். ஒவ்வொரு கல்வி சார்துறையிலும் இந்த நிலைதான் (புறநடைகள் இருக்கலாம்)

உலக நாடுகள், எம் அரசு, எம் வர்த்தக சமூகம், எம் அதிகாரிகள் கடமை செய்யவில்லை. எம்மைக் கைவிடுகின்றன என ஏசுகிறோம். நாம் எமக்குரிய கடமைகளைச் செய்கிறோமா? எந்த வாயைக் கொண்டு மற்றவர்களை [illegible]

[illegible]
அதிபர்.

கொக்குவில்.

## 1700 குடும்பங்களுக்கு 'கியூமெடிக்கா' உதவி

வண்ணை, மார்ச் 18

யாழ்.குடாநாட்டில் 'நிஷா' புயல் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 700 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு 'கியூமெடிக்கா' நிறுவனத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக நிறுவன இணைப்பாளர் என்.கே.இராஜசூரியர் தெரிவித்தார்.

'கியூமெடிக்கா' நிறுவனத்தால் உலர் உணவுப் பொருள்கள் பெறும் பயனாளிகளில் இதுவரை 300 பேருக்கு நிவாரப் பொருள்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எஞ்சியவர்களுக்கும் மிக விரைவில் உலர் உணவு நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுக் கொண்டிருப்பதாகக் 'கியூமெடிக்கா' வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (1-160)

## மூளாய் வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை

சுழிபுரம், மார்ச் 18

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் வியாழக்கிழமை தோறும் கண் சத்திர சிகிச்சையை வைத்திய கலாநிதி குகதாசன் மேற்கொண்டு வருகிறார்.

கண் நோயாளர்கள் பெரும் எண்ணிக்கையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த வாரம் 9 பேருக்கு கண் சத்திரசிகிச்சை நிறைவு செய்யப்பட்டது.

வைத்தியசாலை நிர்வாகத்தினரின் துரித நடவடிக்கையால் பல்வேறு நோய்களுக்குரிய வைத்திய நிபுணர்களால் வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (203-250)


**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்

இல.19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (63472)

**STUDY IN INDIA**

GARDEN CITY COLLEGE

BANGALORE UNIVERSITY DEGREES

Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK

Courses Offered

BCA Bachelor of Computer Application
B.Sc. Computer Science/Microbiology/Genetics Biotechnology/Fashion and Apparel Design
B.A. Journalism/B.Com Computers
BBM Bachelor of Business Management
BHM Bachelor Of Hotel Management
BPT Bachelor of Physiotherapy
LAW Bachelor of Law

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

www.studyingcc.com

தமிழில் தொடர்புகளுக்கு 0777-767818/011-4512591

SCHOLARS INFORMATION CENTER

2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

### தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2008



த.புருஷோத்தமன் -130 ந.அஜிந்தன் - 124 ஜெ.மேனுஜா - 121 ஞா.விதுஷியா - 121



இ.டிலக்சனா - 119 ஜெ.சிவந்துயன் - 114

| | |
|---|---|
| வி.றஜீவன் | - 115 |
| வ.டிலக்சன் | - 115 |
| ச.விேனாஜா | - 115 |
| ஜெ.நிறோஜினி | - 112 |
| இ.கீர்த்திகன் | - 111 |
| சி.கீர்த்தனா | - 110 |
| ச.ஜெதுஷா | - 105 |
| கு.மதுரா | - 102 |
| கு.தர்மிசன் | - 101 |

சித்தியடைந்த, அண்மித்த புள்ளிகளைப் பெற்ற எம் சிறார்களின் எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம். கல்லூரி அதிபர், கற்பித்த ஆசிரியர்கள் த.அருளரசன், வ.துவாரகன் மற்றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பெற்றோர்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

(அ/557539)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய ஒளி நமது உடலுக்கு நன்மை பயக்கின்றதா?



தகவல் பெட்டகம்

'மகனே வெய்யிலில் நெடுநேரம் அலைந்து திரியாதே. காய்ச்சல், கண்வருத்தம், சளிச்சுரம் போன்ற வருத்தங்கள் ஏற்பட்டு வருந்தாதே. தோல்புற்றுநோய் கூடப் பிடித்து விடலாம்' என்பது சில தசாப்த காலமாக முதியோர் தம் பிள்ளைகளுக்குக் கூறிவரும் தாரக மந்திரம்.

இருப்பினும் அவர்களது அறிவுரையை நாம் மீள்பரிசோதனை செய்யும் காலகட்டத்திற்கு வந்துவிட்டோம் போலத்தெரிகிறது.

'சூரிய ஒளி எங்கள் மேனியில் விட்டமின் 'டி' யை உருவாக்கும் ஆரோக்கிய நன்மையை விளைவிப்பதால், நமது உடலை வெய்யில் படும்படியாக விடுதல் நியாயம் போலத் தோன்றுகிறது' என சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அதிகளவு சூரியஒளி புற்றுநோய் ஏற்படும் சாத்தியத்தை குறைவடையச் செய்கிறது. பிரதிகூல ஆரோக்கியப் பாதிப்புக்களை விட, அது அதிகளவு நன்மையையே தருகிறது என அந்த ஆய்வு மேலும் தெரிவிக்கிறது.

அமெரிக்க 'ஹார்வேர்ட்' மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சியாளர்களால், ஆண், பெண் உட்பட 1739 பேர்களை வைத்து இந்த ஆய்வுகள் நடத்தப் பட்டிருந்தன.

மேலும் குடல், நுரையீரல் மற்றும் மார்பு முதலிய பாகங்களில் ஏற் படும் புற்று நோய்களில் இருந்தும் இருதய நோய்களிலிருந்தும் விட்டமின் 'டி' பாதுகாப்பளிக்கிறது என்கிறார் சூரிய ஒளிக்கும் தோல்புற்று நோய்க்கும் உள்ள தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற 'றிச்சாட் செட்லா'.

எனவே டாக்டரின் ஆலோசனையைப் பெற்று சூரிய ஒளியை அனுபவியுங்கள். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை மறந்து விடாதீர்கள்.*******



தொகுப்பு: எஸ். பேராசிரியன்

# மிருகங்களின் பரிணாம வளர்ச்சி

பரிணாம வளர்ச்சி தத்துவத்தை எல்லோருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் ஏற்றுக்கொள்பவர் களைப் பொறுத்தவரை விலங்குகளின் வாழ்க்கையானது (மீன்கள், பறவைகள் மற்றும் பூச்சிகள் அடங்கும்) சுமார் 500, 000, 000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பமானது என்று நம்புகிறார்கள். இது பூமியில் வெப்பம் தணிந்து சமுத்திரங்கள் தோன்ற ஆரம்பித்ததன் பின்னரே நிகழ்ந்ததாம். பூமியில் உயிர்கள் தோன்றுவதற்கு முன்பே சமுத்திரத்தில் உயிர்கள் வாழ்ந்திருந்தனவென்று அறிவியலாளர்கள் நம்புகின்றார்கள்.

ஆரம்பகாலத்தில் அவைகளின் நகர்வு மிக விசித்திரமாகவே இருந்துள்ளது. ஏனென்றால் அவைகளுக்கு கால்கள் இருக்கவில்லை. வெகு நீண்ட காலத்திற்கு அவைகள் தமது சிறகு (துடுப்பு) களையே நடப்பதற்கும் பயன்படுத்த வேண்டியிருந்தது. பலதலைமுறைகளுக்குப் பிறகே அவைகளுக்கு நிலத்தில் நடமாடுவதற்கான கால்களும் கைகளும் தோன்றின. இம்மாதிரியான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேசமயம் அந்த விலங்குகள் தொடர்ந்தும் தண்ணீரிலேயே முட்டைகள் இட்டும் நடக்கும் மிருகங்கள் - இவைகளின் மூதாதையர்கள் மீன்களைப்போல் இருந்துள்ளமையால் 'அம்பிபியன்ஸ்' (AMPHIBIANS) என்றழைக்கப்படும் நீரி லும் நிலத்திலும் வாழக்கூடிய விலங்குகளாக மாறலாயின. (குளிர்ந்த இரத்தத்தைக் கொண்ட இவை தண்ணீரில் இடப் பட்ட முட்டைகளிலிருந்து பொரிக்கப்பட்டு நிலத்தில் பெரும் பகுதி வாழ்க்கையை கழிப்பவையாய் இருந்துள்ளன.)



காலப்போக்கில் இந்த மிருகங்களில் ஒருபகுதி நீரில் முட்டையிடுவதை நிறுத்திக் கொண்டன. இது நிகழ்ந் ததையடுத்து நீரிலும் நிலத்திலும் வாழ்ந்து கொண்டிருந்த சில மிருகங்கள் ஊர்வனவாக மாறின. (இவை தமது முட்டைகளை நிலத்திலேயே இடத்தொடங்கின)

இவ்வாறான ஊர்வனவாகிய விலங்குகள் 100 இலட்சம் ஆண்டுகள் பூமியை ஆட்கொண்டிருந்தன. இவ்வாறான ஊர்வனவாகிய விலங்குகளுக்கு காலப்போக்கில் உடம்பில் சிறகுகள் தோன்றலாயின் அவைகளின் முன் உறுப்புகள் பறப்பதற்கு உதவும் செட்டைகளாக மாற்ற மடையலாயின. காலப்போக்கில் இவை பறக்கும் தன்மையைப் பெற்றுக்கொண்டன. அதனால் அவை பறவைகள் என அழைக்கப்படலாயின. ஊர்வனவற்றின் செதில்களில் ஏற்பட்ட மாற்றமே பறவைகளின் பறக்கும் செட்டைகளாயின.

ஏனைய ஊர்வன முட்டையிடுவதை நிறுத்திவிட்டு குட்டியீனும் விலங்குகளாக மாற்றம் பெறலாயின. இவை சூடான இரத்தம் கொண்ட பாலூட்டி மிருகங்களாக வளர்ச்சியடைந்தன.★

- ரம்யன்



# புதன் பொய்கை

## பாவம்!

பெண்களே
நீங்கள்
சுமங்கலிகள் என்று
ஊருக்கு உரைப்பதற்கு
பாவம் அந்த
ரோஜாச் செடிகளை
விதவைகள்
ஆக்கவேண்டுமா?

யோ.கௌதமி, கதுமலை தெற்கு.

## மரங்கள்



நாங்கள்
எப்பொழுதும்
அமைதியைத்தான்
எதிர்பார்க்கிறோம்
காற்றுத்தான்...
விடுவதாயில்லை.

எஸ்.கவிதரன்

## உன்னுடன்


உந்தன் விழிகளில்
ஒழிந்திருப்பேன்....
நீ நடக்கும் பாதையில்
பூக்களாக பூத்திருப்பேன்....
உன் சுவாசத்தில்
காற்றாக கலந்திருப்பேன்......
உன் எழுத்தில்
உயிரோட்டமாய்
மறைந்திருப்பேன்........
உந்தன் இதயத்தில்
காதலாக நிறைந்திருப்பேன்!

# மற்றவர்களின் நடவடிக்கையைக் கண்காணிக்கக் கமரா!

இப்போது நீங்கள் யாரையாவது இரகசியமாக அவருக்குத் தெரியாமல் அவருடைய நடவடிக்கையைக் கண்காணிக்க வேண்டுமா? இதோ வந்து விட்டது 'ஒயர்லெஸ்' வீடியோ கமரா. இதன்மூலம் நீங்கள் எங்கிருந்தபடியும் கண்காணிக்கலாம். தேவைப்பட்ட இடத்தில் பசை போட்டு, இந்த கமராவை ஒட்டிவிட்டால் மட்டும் போதுமானது.

இணையத்தள வசதி மூலம் எங்கிருந்தும் வீடியோவில் பதிவாகும் காட்சிகளை கண்காணிக்க முடியும். நவேடாவில் உள்ள லாஸ் வேகாசில் நடந்த நுகர்வோர் எலக்ரோனிக் கண்காட்சியில், இந்த நவீன வீடியோ கமரா காட்சிக்கு வைக்கப்பட்டது.

இந்தக் கமராவைப் பயன்படுத்துவோர், எங்கிருந்தபடியும், தங்கள் குடும்பத் தில், நிறுவனத்தில் நடப்பவற்றை கண்காணிக்க முடியும். தற்போது, சோதனை முறையில் பரிசோதிக்கப்பட்டுவரும் இந்தக் கமரா, இன்னும் ஆறுமாதங் களில் வர்த்தக ரீதியாக விற்பனைக்குக் கொண்டு வரப்படவுள்ளது. இந்தக் கமராவின் தொழில் நுட்பமுறை, 'அவாக்' என்று அழைக்கப் படுகிறது. இந்தக் கமரா மிகவும் சிறிய வடிவானது; பற்றிரியில் செயற்படக் கூடியது. ஒயர்லெஸ் வீடியோ கமராவாகவும், புகைப்படக் கருவியாகவும் இதைப்பயன்படுத்தலாம். இதை சுவர்களிலோ, வேறு இடங்களிலோ பசை போட்டு ஒட்டி வைத்து விட்டால் போதுமானது. மற்றவர்களின் நடவடிக்கைகளை நீங்கள் இருந்த இடத்திலிருந்தே பார்த்துக்கொள்ளலாம். -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



விடத்தற்பளை கமலாசனி வித்தியாலத்தில் தரம் 1 வகுப்பில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் தென்மராட்சி கல்வி வலய கணிதவள ஆசிரிய ஆலோசகர் சி.பத்மநாதன் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருடன் புதிய மாணவர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

(207)



கெருடாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் இல்லக் கொடிகள் ஏற்றப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கணிதவள நிலையத்தினரால் ஜி.சீ.ஈ மாணவர்களின் கணித பாட அடைவை மேம்படுத்தும் முகமாக 'சுயகற்றல்' கையேடு வெளியிடப்பட்டது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி ஒருவருக்கு கையேட்டை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

கணித வள நிலைய முகாமையாளர் சி.பத்மநாதனும் படத்தில் காணப்படுகிறார்.

(59)



இணுவில் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா, கல்லூரி அதிபர் வ.சதானந்தன் மற்றும் ஆசிரியர்களால் அழைத்துவரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# தவக்காலச் சிந்தனை

## அமைதி நிலவிட அன்பினில் வாழ்வோம்

''நீங்கள் தொடக்கத்தில் இருந்து கேட்டறிந்த செய்தி இதுவே. நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும்'' *(1 யோ 3:11).*

அன்பு என்னும் வார்த்தைக்கு ஆயிரம் அர்த்தங்கள் இருந்தாலும் உண்மையான அன்பின் சிகரமாக விளங்குபவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. தன்னுயிரையே தியாகம் செய்யும் அளவிற்கு அவர் எங்கள் மேல் அன்பு கூர்ந்தார். பண்புகளில் சிறந்த, பரந்த, திறந்த பண்பு அன்பு. வாழ்க்கையின் அவசியமான பண்பு அன்பு ஒன்றே.

இயேசு கிறிஸ்து அன்பைப் போதித்தார். வாழ்க்கையில் சாதித்தார். அன்பில் குறைபடுவோமானால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் குறைவு படுகின்றோம். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அன்பினில்தான் அடங்கியுள்ளது. இயேசு கிறிஸ்துவை உடையவன் அன்புடையவன். இயேசு கிறிஸ்து இல்லாதவன் அன்பில் குறைவு பட்டவன்.

இயேசு காட்டிய தூய அன்பு விளங்க முடியாத அன்பு, விந்தைக்குரிய அன்பு, வியப்புக்குரிய அன்பு. சிலுவை மரத்தில் தொங்கி எம் பாவங்களை ஏற்றுக் கொண்டு எமக்காக உயிர்துறந்த அன்பே விந்தைக்குரிய அன்பு. இயேசு பாவத்தை வெறுத்தார். ஆனால், ஒருபோதும் பாவிகளை வெறுக்கவில்லை. மாறாக அவர்கள்மேல் அன்பு கூர்ந்தார்.

கிறிஸ்தவ வாழ்க்கையின் குறிக்கோள் நாம் அன்பைப் பறை சாற்றுகின்றவர்களாக மட்டும் இராமல் அன்பை வாழ்க்கையில் கைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும். அன்பின் போதனையை அல்ல அன்பின் சாதனையே கிறிஸ்து விரும்புகிறார். நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அன்பின் உருவமாக விளங்க வேண்டும். யுத்தத்தால் எம் மண்ணிலே நின்றாடும் ஓல அவலவொலிகள் நீங்கி அகிலமெங்கும் அமைதி நிலவிட கிறிஸ்துவின் அன்பில் வாழ்ந்திடுவோம்.

தே.சுரன்ஸ் (அ.ம.தி)

# புத்தகங்களைப் பாதுகாக்கும் மாணவருக்குச் சான்றிதழ்கள்

வண்ணை, மார்ச் 18

கல்வி கற்கும் காலத்தில் இலவசமாக வழங்கப்பட்ட பாடப் புத்தகங்களைப் பாதுகாப்பாகப் பாவித்து மீளளிக்கும் மாணவ, மாணவிகளுக்கு நற்சான்றிதழ்களை கல்வியமைச்சின் நூல் வெளியீட்டுத்திணைக்களம் வழங்க முன்வந்துள்ளது.

அந்த வகையில் குடாநாட்டுப் பாடசாலைகளிலும் மாணவர்களைத் தெரிவு செய்து சான்றிதழ் வழங்க சான்றிதழ்களை கொழும்பில் இருந்து கல்வியமைச்சின் நூல் வெளியீட்டுத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.


(203-160)

## தவறிவிட்டது

இலக்கம் 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சிவகுரு தில்லைநாதன் என்பவரது மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ், வரிப்பத்திரம் மற்றும் இராணுவ பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் என்பன கடந்த 11.03.2009 அன்று திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியிலோ, அல்லது திருநெல்வேலிச் சந்தி முருகன் உணவகத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 * 04 * 1941



இறப்பு 18 * 03 * 2003

### அமரர் செல்லப்பா தங்கராசா

(இளைப்பாறிய அதிபர், யா/ கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை)

*திதி: அபரபக்கப் பிரதமை (10.04.2009)*

ஆறாண்டுக்கு முன் நாம் இறைத்த கண்ணீரை - எத்தனைமுறை ஆதவன் வந்தும் அள்ளிக்கொள்ள முடியாதே!

தங்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

தும்பளை வீதி, பருத்தித்துறை. (83437)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2007 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | | |
| 3 | காங்கேசன் துறை - 031 | | |
| 4 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 5 | யாழ்.பிரதான வீதி - 104 | 06.06.2009 | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | | |
| 7 | ஊர்காவற்றுறை - 105 | 07.06.2009 | |
| 8 | நெல்லியடி - 106 | | |
| 9 | அச்சுவேலி - 107 | 08.06.2009 | |
| 10 | சங்கானை - 108 | | |
| 11 | சுன்னாகம் - 109 | 13.06.2009 | |
| 12 | சாவகச்சேரி - 110 | | |
| 13 | சேவை நிலையம், கொடிகாமம் - 904 | 14.06.2009 | |
| 14 | வல்வெட்டித்துறை - 141 | & | |
| 15 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | | |
| 16 | சேவை நிலையம், திருநெல்வேலி - 855 | 15.06.2009 | |
| 17 | யாழ்.கன்னாதிட்டி - 284 | | |
| 18 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |
| 19 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றித் திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
வடவலயம்.

(அ/5575507)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி.வேல்நம்பி எழுதிய 'வலுவூட்டல் முகாமைத்துவம்', 'பங்குடமைக் கணக்குகள்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டுவிழா அண்மையில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

வணிக மாணவர் மன்றத்தின் எற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

யாழ்.பல்கலைக்கழக வணிக பீடாதிபதி க.தேவராஜா மங்கள விளக்கேற்றுவதை மூன்றாவது படத்திலும், நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் வெளியீட்டு வைப்பதையும் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் ந.வன்னியசிங்கம் பெற்றுக் கொள்வதையும் நான்காவது படத்தில் காணலாம். *(படங்கள்:கோப்பாய்ச் செய்தியாளர்)*

# அஞ்சல் அ.அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தெளிவான முறையில் விவரங்களை அனுப்ப வேண்டும்

## யாழ்.பிரதம தபாலக உயர் அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 18

அஞ்சல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தமது முழு விவரங்களையும் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும் என்று யாழ். பிரதம தபாலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.பிரதம தபாலகத்திற்கு அஞ்சல் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களால் அனுப்பப்படும் பெரும்பாலான விண்ணப்பங்களில் பெயர் மற்றும் பிறந்த திகதி போன்றவை தெளிவற்ற முறையில் குறிப்பிடப்படுகின்றன.

இவ்வாறு தெளிவற்றிருக்கும் விண்ணப்பங்களுக்கு அஞ்சல் அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் தபாலகம் சிரமமடைந்து வருகின்றது.

இந்த அஞ்சல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் விவரங்கள் அதாவது முழுப் பெயர் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

அத்துடன் பிறந்த திகதி பிறப்பு அத்த தாட்சிப் பத்திரத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உரிய கவனம் எடுத்து சரியாக பரிசீலித்த பின்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் கோட்ட மற்றும் வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களின் அடையாளத்தை நிரூபிப்பதற்கு அஞ்சல் அடையாள அட்டை மிக முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது. (203-224)

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 18

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந் திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பெருந்திருவிழாவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தத் திருவிழா 26 ஆம் திகதி வியாழக்கிழமையும் இடம்பெற உள்ளன. (203-250)

* * *

சுழிபுரம், மார்ச் 18

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பரமணிய சுவாமி ஆலய இலச்சார்ச்சனை இம்மாதம் பிற்பகுதியில் ஆரம்பமாகி நடைபெறும்.

தினமும் இலட்சார்ச்சனை முடிவடைவதைத் தொடர்ந்து கந்தரநுபூதி ஓதி நிகழ்வு முடிவடையும். (203-28)

* * *

சுழிபுரம், மார்ச் 18

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய பொங்கல் விளக்கேற்றும் நிகழ்வு நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

முதலாவது பொங்கல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை முதல் ஆரம்பமாகி மறுநாள் புதன்கிழமை காலை வரை நடைபெறும். (204-28)

# கசிப்பு வைத்திருந்த மூவருக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

கசிப்பு வைத்திருந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 21 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் நடத்திய திடீர் பரிசோதனையின் போது அகப்பட்ட மூவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

இதனை அடுத்து சரசாலை தெற்கைச் சேர்ந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 10 மாத சாதாரண சிறைத் தண்டனையும், மட்டுவில் வடக்கைச் சேர்ந்த நபருக்கு 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தவறின் பத்து மாதச் சாதாரண சிறைத் தண்டனையும், மீசாலை கிழக்கைச் சேர்ந்த நபருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தவறின் 6 மாத சாதாரண சிறையும் விதித்து நீதிவான் உத்தர விட்டார். (203-207)




## வலி.கிழக்கு பிரதேச சபைப் பிரிவில்

# 40 வருடங்களாகத் திருத்தப்படாத வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 18

40 வருடங்களுக்கு மேல் திருத்தி அமைக்கப்படாமல் இருக்கும் கதிரிப்பாய் சந்தியில் இருந்து வளலாய் நோக்கிச் செல்லும் முரசொலி வீதியை திருத்தி அமைக்குமாறு கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலையம் வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளரிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக கதிரிப்பாய் முரசொலி சனசமூக நிலையத்தின் செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கதிரிப்பாய் சந்தியில் இருந்து வளலாய் விமான நிலைய வீதியை நோக்கி மேற்கே செல்லும் முரசொலி வீதி 40 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது.

கதிரிப்பாய், வளலாய் ஆகிய கிராமங்களில் குடியிருக்கும் 300 க்கும் மேற்பட்ட குடும்பத்தினரும் பிரயாணம் செய்யும் வீதியாக இருப்பதுடன் 100 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கைக்கான உள்ளீடுகளையும் விளைபொருள்களையும் இந்த வீதியில் எடுத்துச் செல்ல முடியாத நிலையில் உள்ளது.

பாதசாரிகள், பாடசாலை மாணவர்கள் பயணம் செய்யும்போது பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

பொதுமக்கள், விவசாயிகளின் சிரமங்களைக் கருத்தில் கொண்டு வீதியைத் திருத்தி அமைக்க வேண்டும்- என்றுள்ளது. (203-11)

# கள்ளுத் தவறணை மூடப்பட்டது நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் மக்கள்

வடமாரட்சி, மார்ச் 18

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவில் இயங்கிவந்த கள்ளுத் தவறணை மூடப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளனர். கத்தோலிக்க தேவாலயம், இந்துக் கோயில் என்பவற்றுக்கு அருகில் பாடசாலை மாணவர்கள், பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பலரும் அதிகமாகப் பயன்படுத்தும் இவ்வீதியில் நீண்ட காலமாக கள்ளுத் தவறணை ஒன்று இயங்கிவந்தது.

இக் கள்ளுத் தவறணையால் அங்கு சென்று வருவோர் நடந்து கொள்ளும் விதம் அனைவரையும் நீண்டகாலமாகப் பாதித்து வந்தது. அவர்களின் அன்றாட இயல்பு வாழ்க்கைக்கு இது பெரிதும் குந்தகம் விளைவித்து வந்ததாகவும் இத்தவறணையை மூடிவிடவோ அல்லது வேறு ஒதுக்குப்புறத்துக்கு மாற்றிடவோ உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பருத்தித்துறையைச் சேர்ந்த மத நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், பொதுமக்கள் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் முறையீடு செய்திருந்தனர்.

இது தொடர்பாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இப்பகுதியில் கள்ளுத் தவறணை இயங்குவதற்கான அனுமதி ரத்துச் செய்யப்பட்டது. இதன் விளைவாக குறிப்பிட்ட கள்ளுத் தவறணை மூடப்பட்டது.

தவறணை மூடப்பட்டது குறித்து இப்பகுதியில் உள்ள மத நிறுவங்கள், பொது அமைப்புக்கள் பருத்தித்தித் துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனுக்கு மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

எதிர்காலத்திலும் இப்பகுதியில் கள்ளுத் தவறணை எதுவும் இயங்க அனுமதிக்க வேண்டாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (203-236)

# நூல் வெளியீட்டு விழாவும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், மார்ச் 18

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் 2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் கல்லூரிச் செய்தி இதழ் 'முகிழ்' வெளியீடும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாடசாலை உப அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விற்கு வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி பு.சிவலிங்கம் பிரதம விருந்தினராகவும், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி றூபா உதயரட்ணம் சிறப்பு விருந்தினராகவும், வலிகாமம் கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

# தற்போதைய சூழலில் கணனி அறிவு இல்லையென்றால் அது கைவிரல் அடையாளம் இடுவதற்குச் சமன்

## ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

ஆனைக்கோட்டை, மார்ச் 18

ஆங்கில அறிவு குறைவு என்பதற்காக கணனிக் கல்வியைக் கற்காமல் இருப்பது தவறு.

கணனியறிவைக் கற்கக் கற்க ஆங்கிலப் புலமை ஏற்படத் தொடங்கிவிடும்.

கணனீயை இயக்க ஆரம்பிக்க கணனி மொழி புரிந்துவிடும்.

தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு கணனி அறிவு இல்லையென்றால் அது கைவிரல் ஒப்பம் இடுவதற்குச் சமனானது.

இவ்வாறு தெரிவித்தார் தீவக வலய முறைசாராக் கல்வி முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.கமலாகரன்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் முன்னைய மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, பயிற்சி நெறியை ஆரம்பித்து தொடங்கி வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இன்றைய காலகட்டத்தில் கணனி அறிவு இல்லையென்றால் அது கையெழுத்துப் போடத் தெரியாது. கைவிரல் அடையாளத்தை ஒப்பமாகி இடுவதற்கு சமமானது.

எனவேதான் உங்கள் வாசல்தேடி கணனிப் பயிற்சிநெறி வந்துவிட்டது. அதைக் கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.

இச்சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி இந்த ஒரு வருட காலத்தில் உங்கள் போதனாசிரியரிடமிருந்து முழுமையான கணனி அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இலங்கையில் அபிவிருத்தி வேலைகள் துரித கதியில் ஆரம்பிக்க இருக்கின்றன. அது உங்களுக்கும் கைகொடுக்கும். எந்த ஒரு வேலைக்கும் இனி கணனி அறிவே முக்கிய தகுதியாகக் கொள்ளப் படும்.

எனவே இலங்கையில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியில் ஏற்படும் வேலை வாய்ப்புக்களைத் கருத்திற் கொண்டு கணனிப் பயிற்சிநெறியை பூரணமாக நிறைவு செய்யுங்கள்-என்றார்.

கல்லூரி அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் மேற்படி கணனிப் பயிற்சி நெறி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (203-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் பெற்றோர், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வுச் செயற்றிட்டம் கடந்த சனிக்கிழமை ஆனைக்கோட்டை, கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயப் பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் உரையாற்றுவதையும் எழுத்தறிவூட்டல் ஆசிரியர் த.மகாதேவன், செயற்திட்ட அலுவலர் ந.சண்முகராஜா, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய அதிபர் ந.சிவகடாச்சம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ச.நாகராஜா, ஆனைக்கோட்டை றோ.க.பாடசாலை அதிபர் திருமதி ந.சந்திரகுமார், கிராம அலுவலர் திருமதி சி.பிறேசிலா, செயற்றிட்ட அலுவலர் அ.சிவரூபன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்தில் காணலாம்.

# யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் தேங்கியுள்ள வாகன உடைமைகளின் உரிமையாளர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பதிவுத் தபால் மூலம் வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்கள் என்பன வாகன உடமையாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

உரியவர்கள் குறித்த முகவரியில் இல்லாத காரணத்தினால் தபாலில் விநியோகம் செய்யப்படாத வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் வாகனப் பரிசோதனை தொடர்பான கடிதங்கள் யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

உரியவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, வாகன ஆவணங்களுடன் அலுவலக நாள்களில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள ஆவணங்களின் உரிமையாளரின் பெயர் விவரம் வருமாறு:

NP HV - 9208 கே.செல்லப்பா - கோண்டாவில் தெற்கு, NP JA - 3616 என்.மனோரஞ்சன் - கொக்குவில் மேற்கு, NP GU - 0992 கே.நயசீலன் - கொக்குவில் மேற்கு, NP HC - 0429 ஆர்.நகுலேஸ்வரன் - புன்னாலைக் கட்டுவன்,

37 - 2034 ரி.பொன்னம்பலம் - மட்டுவில் தெற்கு, 500 - 6723 ஈ.சின்னத்துரை - கல்வயல்,

NP JB - 8969 எம்.எஸ்.பரமேஸ்வரன் - நுணாவில் தெற்கு, 500-2150 எஸ்.சின்னக்குட்டி - சாவகச்சேரி வடக்கு, NP JY - 6598 செல்வராசா சுதா - சரசாலை வடக்கு, NP JZ - 6912 யூ.லவகுமார் - சங்கத்தானை, 28-1642 ரி.ரஞ்சித்குமார் - கைதடி, NP JU - 9192 கே.மரியநாயகம் - நாவாந்துறை, NP GG - 9860 எம்.முகுந்தன் - யாழ்ப்பாணம், NP GA - 8734 ஏ.அனுசியஸ் - கடற்கரை வீதி, பாஷையூர், NP GA - 8784 ஜே.கே.பத்மநாதன் - நீராவியடி, யாழ்ப்பாணம், NP HT - 2172 ரி.சுரேஸ்குமார் - மட்டுவில் கிழக்கு, 500-7136 பி.தங்கத்துரை - மந்துவில் கிழக்கு, 30-9768 கே.தர்மராசா - சுன்னாகம், 136 - 1501 பி.கிருஷ்ணநாதன் - உடுவில் கிழக்கு, 9-0750 டபிள்யூ.விநாயகரத்னம் - வட்டுக்கோட்டை, NP HH - 3547 எஸ்.ஸ்ரீதரன் - பலாலி கிழக்கு, 159-5813 எம்.தற்பரநாதன் - வசாவிளான் தெற்கு, 500-7117 என்.ஜெயக்குமார் - மண்கும்பன், 53-2125 எஸ்.ரவிக்குமார் - ஏழாலை தெற்கு, 134-6288 எம்.பொணான்டோ - மண்டைதீவு, 500-4943 எஸ்.குகேந்திரன் - யாழ்ப்பாணம், 500-6086 வி.பொன்னம்பலம் - யாழ்ப்பாணம், NP MA - 2761 வி.ராகுலன் - நல்லூர், 500-8383 ஆர்.தர்மலிங்கம் - மானிப்பாய் வீதி, NP TQ - 9238 வி.சிறிபாஸ்கரன் - கல்வியங்காடு, NP JN - 4428 என்.தர்மலிங்கம் - சுண்டுக்குளி, NP HD - 7716 எ.பொணான்டோ - கடற்கரை வீதி, நாவாந்துறை, 82-5241 கே.சிவபாலன் - புலோலி வட கிழக்கு, NP HH - 5668 எஸ்.பிரணவன் - யாழ்ப்பாணம், NP HB - 2088 எம்.இராம்சாந்தி - மல்லாகம், NP HM - 7417 எஸ்.ஏ.குமார் - மல்லாகம், NP ME - 0763 ரி.கபிலேந்திரா - அளவெட்டி வடக்கு, NP GZ - 7502 எஸ்.பிரபாகரன் - சண்டிலிப்பாய் தெற்கு, NP MH - 8398 கே.சந்தனலஷ்சுமி - அரியாலை, NP HD - 3605 ரி.ரவீந்திரன் - திருநெல்வேலி, NP GD - 3053 எஸ்.விவியன் - யாழ்ப்பாணம், 83 SRI -5032 எஸ்.சந்திரசேகரன் - காங்கேசன்துறை, EP GD - 9805 ஆர்.வேதநாயகம் - சாவகச்சேரி, 122 -1157எஸ்.சிவநாதன் - சுன்னாகம், 3 SRI 7843 வி.கேதீஸ்வரன் - கரவெட்டி, 500 - 6839 எம்.சிவசுப்பிரமணியம் - சாவகச்சேரி, NP JG - 9893 பி.பத்மகாந்தன் - வட்டுக்கோட்டை, 149 - 0127 கே.சிறிஸ்கந்தராஜா - சுன்னாகம் , NP JP - 6030 எஸ்.சிவரஞ்சன் - நாகர் கோயில், NP MH - 3934 எஸ்.றோமன் ஜெபரத்தினம் - குருநகர், NP GY- 9688 எம்.எட்வேட் ரஞ்சித் - சுன்னாகம், NP HF - 2095 கே.லோகப்பிரசன்னா - சுன்னாகம், NP MD - 7605 பி.சுரேஸ்குமார் - மல்லாகம், NP MH - 92944 சமூகப் பொருளாதார தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையம் - திருநெல்வேலி, NP MH - 2954சமூகப் பொருளாதார தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையம் - திருநெல்வேலி.

## சமுர்த்தி நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 18

மூன்று மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணம் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்குமான நிவாரணப் பொருள்கள் கூட்டுறவுச் சங்க கிளைகள் ஊடாக சமுர்த்திப் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் நிவாரணத்திற்கு விநியோகிக்கப் பட்டு வருகின்றன.

(203-224)

## இடம்பெயர்ந்தோருக்கு உதவுதல் தொடர்பான கலந்துரையாடல்

நல்லூர்,மார்ச் 18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகளுக்கு உதவ வேண்டிய தேவை இருப்பதால் அது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்த இந்து அமைப்புக்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

அரச செயலகத்தாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் வழங்கப்படும் உதவிகளுக்கு மேலதிகமான உதவிகள் அவர்களுக்குத் தேவையாக இருப்பதால் அரச அதிபர் ஊடாக இந்த உதவிகளை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், புத்தி ஜீவிகள், பொதுமக்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203-111)


ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road, Kanthermadam, Jaffna
Phone: 0212228093
E-mail: alliancejaffna@yahoo.com

LEARN FRENCH THE FRENCH WAY
பிரெஞ்சு மொழி வகுப்புகள்
பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன!
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
கட்டணம், ஏனைய விவரங்களை நேரில்/ தொலைபேசியின் ஊடாக பெறலாம்.



பருத்தித்துறை
வேலாயுதம் மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்க
வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2009

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மார்ச் மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல பழைய மாணவர்களும் இப்பொதுக் கூட்டத்திற்குச் சமூகமளித்து சங்கத்தை வலுப்படுத்துமாறு அன்புடன் அழைக்கின்றோம். பிரேரணைகள் ஏதும் இருப்பின் 25.03.2009ஆம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

பழைய மாணவர் சங்கம்
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்,
பருத்தித்துறை.

கி.குகநாதன்
செயலாளர்


## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 18

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன், நிர்வாக அலுவலர் க.சரவணபவன் ஆகியோருக்கு வலய நலன் புரிக் கழகத்தினரால் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

வலய மாநாட்டு மண்டபத்தில் கழகத் தலைவர் பீ.முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(203-227)


கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றும்
திருமதி இ.மோகனேஸ்வரன் அவர்களின் தாய்
திருமதி விசாலாட்சி நாகலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
யாழ்ப்பாணம். (83609) மாவட்ட திட்டமிடல் செயலகம்



நினைவஞ்சலி

6ஆம் ஆண்டு

தோற்றம் 05 * 09 * 1929
மறைவு 04 * 06 * 2003



31ஆம் நாள்



தோற்றம் 05 * 04 * 1932
மறைவு 16 * 02 * 2009

அமரர் கபிரியேல் அருளப்பு திருமதி அருளப்பு ஞானம்மா

அம்மா என்ற வார்த்தைக்கு
அர்த்தங்கள் பலர் கூறினாலும்
அதை அனுபவிக்கும் போது தான்
அதன் மகத்துவம் புரிகின்றது
அம்மாவின் வாழ்நாளில்
ஆயிரம் அர்த்தங்கள் கண்டோம்
குடும்ப வாழ்விற்கு வழிகாட்டி
குலத்தினுள் உயர்ந்து நின்றாய்

இன்னும் பல்லாண்டு எம்முடனே வாழ்ந்து
இனியவழி காட்டுவாய் என்று நினைக்கையிலே
உன் கடைசி நேரமதில்
நீ பட்ட வேதனைகள் நாமறிவோம்
வாய்திறந்து ஒருவார்த்தை கூறாது
கண்ணீர் மல்கிச் சென்றாயோ
உன்பதிலை நினைத்து
உருகி நீ மரணித்தாயோ?

எங்கள்அன்புப் பெற்றோரே உங்கள் ஆத்ம சாந்திக்காக நாங்கள் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(83608)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய - நியூஸிலாந்து டெஸ்ட் இன்று ஆரம்பம்

# 41 ஆண்டுகாலச் சோகத்திற்கு முடிவுகட்ட டோனி தலைமையிலான அணி தயார்!



ஹாமில்டன், மார்ச் 18

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகின்றது. 41 ஆண்டுகால இந்திய ரசிகர்களின் சோகத்திற்கு முடிவுகட்ட டோனி தலைமையிலான அணி தயாராகவுள்ளது. இம்முறை இந்திய துடுப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த ஆடுகளம் விசேடமாக தயார் செய்யப்பட்டுள்ளது.

நியூஸிலாந்து சென்றுள்ள இந்திய அணி, 2 ருவெண்ரி 20 போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

ருவெண்ரி 20 தொடரை நியூஸிலாந்து (2-0) வென்றது. அடுத்து நடந்த ஒரு நாள் தொடரில் (3-1) இந்திய அணி, 33 ஆண்டுகளில் முதல் முறையாக நியூஸிலாந்தில் சம்பியன் பட்டம் வென்று சாதித்தது. இதனை அடுத்து இவ்விரு அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. முதல் போட்டி ஹாமில்டனில் நடக்கின்றது.

டெஸ்ட் போட்டிகளை பொறுத்த வரை, நியூஸிலாந்து மண்ணில் இந்திய அணியின் செயல்பாடு பாராட்டும்படியாக இல்லை. கடந்த 1967-1968ஆம் ஆண்டு அப்போதைய அணித்தலைவர் பட்டோடி தலைமையில், இந்திய அணி நியூஸிலாந்தில் டெஸ்ட் தொடரை கைப்பற்றியிருந்தது. அதற்குப் பின் கடந்த 41 ஆண்டுகளாக இந்தியா அங்கு சாதிக்கவில்லை. கடைசியாக கடந்த 2002 - 2003ஆம் ஆண்டு நியூஸிலாந்து சென்ற இந்திய அணி, 2 போட்டிகளிலும் தோல்வி அடைந்துள்ளது. தற்போது டோனி தலைமையிலான அணி நியூஸிலாந்தை வீழ்த்தும் முனைப்பில் உள்ளது.

வேகப்பந்து வீச்சில் இந்தியாவை நிலைகுலைய செய்ய நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் திட்டமிட்டுள்ளனர். மில்ஸ், பிராங்க்ளின் ஜேம்ஸ், ஓ பிரைன், கிறிஸ் மார்டின், பிரன்ட் ஆர்னல் என நியூஸிலாந்தின் வேகக் கூட்டணி தயாராக உள்ளது. ஒருவேளை வேகப்பந்து வீச்சு கைகொடுக்காத பட்சத்தில், விக்ரோறி சுழலில் அசத்த உள்ளார். இதுவரை 89 டெஸ்டில் பந்து வீசிய விக்ரோறி 286 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அதிவேகப் பந்துவீச்சில் ரைடர் அசத்திவருவது நியூஸிலாந்து அணிக்குக் கூடுதல் பலம்.

நியூஸிலாந்தின் முன்னணி துடுப்பாட்டக்காரர்களான ரோஸ் டெய்லர் (14 டெஸ்ட்), ரைடர் (6டெஸ்ட்), பிளின்(9டெஸ்ட்), டிம்மெக்லான்டோஸ் (2 டெஸ்ட்), பிரண்டன் மெக்கலம் (41 டெஸ்ட்) ஆகிய வீரர்களுக்கு பெரிய அளவில் டெஸ்ட் போட்டிகளில் அனுபவம் இல்லை. இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் (156 டெஸ்ட்).அனுபவத்தை விட குறைவு.

தவிர, சச்சின் (12, 429 ஓட்டங்கள்), டிராவிட் (10509 ஓட்டங்கள்), லட்சுமண் (6446 ஓட்டங்கள்) போன்ற இந்திய அனுபவ துடுப்பாட்டக்காரர்களின் செயற்பாடு நியூஸிலாந்தை அச்சுறுத்துகிறது. இவர்களுடன் இணைந்து ஷேவாக், கம்பீர், டோனி, யுவராஜ் என துடுப்பாட்டப் படை மிரட்டுகிறது. பந்து வீச்சில் சகீர்கான், இஷாந் சர்மா, ஹர்பஜன் சிங் இந்தியாவின் வெற்றிக்கு கைகொடுப்பார்கள். இந்திய அணியினரின் கடந்த 18 மாதகால வெற்றிப் பயணத்தில், நியூஸிலாந்து வெற்றி புதிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

நியூஸிலாந்தில் நிலவி வரும் சூழ்நிலை டெஸ்ட் தொடரை முழுமையாக நடத்துவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. அடிக்கடி மழை பெய்வதால் போட்டி அதிகம் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. ஆடுகளத்தின் தன்மையும் உடனடியாக மாறும். இதனால் இந்தியத் துடுப்பாட்டக்காரர்கள் ஓட்டங்கள் குவிப்பது கடினம் என்ற கருத்து நிலவுகிறது.

இன்றைய போட்டி நடக்கும் செடன் பார்க் மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு அதிகம் ஒத்துழைக்கும் என்று நம்பப்படுகிறது.

# மினி உலகக் கோப்பைத் தொடரை தென்னாபிரிக்காவில் நடத்த முடிவு

டுபாய், மார்ச் 18

மினி உலகக் கோப்பைத் தொடர் தென்னாபிரிக்காவில் நடக்கும் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. பாதுகாப்புப் பிரச்சினை காரணமாகக் கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நடக்கவிருந்த மினி உலகக் கோப்பைத் தொடர் (சம்பியன்ஸ் டிராபி), ஒத்திவைக்கப்பட்டது. இந்த ஆண்டு செப்ரெம்பரில் பாகிஸ்தானில் நடைபெறுவதாக இருந்தது. இருப்பினும் பாகிஸ்தானுக்கு வர சர்வதேசக் கிரிக்கெட் வீரர்கள் அச்சம் தெரிவிக்க, இலங்கைக்கு மாற்றப்பட்டது.

கடந்த வாரம் இத்தொடர் குறித்து முக்கிய முடிவு எடுக்க ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரிகளின் கூட்டம் டுபாயில் நடந்தது. இதில் கருத்து தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர், தொடர் நடக்கவுள்ள செப்ரெம்பர் மாதம் கொழும்பில் மழை பெய்ய அதிக வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்தார். பாதுகாப்புக்கும் உரிய உத்தரவாதமும் அளிக்கவில்லை. இதையடுத்து தென்னாபிரிக்காவுக்கு போட்டியை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் கடந்த ஆண்டு ருவெண்ரி 20 உலககோப்பை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

International Cricket Council

இந்நிலையில் மினி உலகக் கோப்பைத் தொடரை தென்னாபிரிக்காவில் நடத்துவது குறித்து, ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரிகளின் கூட்டம் டுபாயில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் தென்னாபிரிக்காவில் வரும் செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 5ஆம் திகதி வரை மினி உலகக் கோப்பைத் தொடரை நடத்துவது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

# புதிய ஐ.சி.சி. தரவரிசையில் ஷேவாக், சச்சின் முன்னேற்றம்

டுபாய், மார்ச்.18

நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் கலக்கிய இந்திய நட்சத்திர துடுப்பாட்டக்காரர்களான ஷேவாக், டெண்டுல்கர் ஆகியோருக்கு ஐ.சி.சியின் தரவரிசையில் பெரிய அளவில் முன்னேற்றம் கிடைத்துள்ளது.

இந்தத் தொடரில் மொத்தம் 299 ஓட்டங்கள் (5 போட்டிகள்) குவித்த ஷேவாக், தரவரிசையில் 9 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். சுமார் 6 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக ஷேவாக் ஒரு நாள் துடுப்பாட்டக்காரர்கள் தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் நுழைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்து தொடரில் ஒரு சதம் உட்பட மொத்தம் 244 ஓட்டங்கள் (3 போட்டிகள்) சேர்த்த டெண்டுல்கர் 8 இடங்கள் உயர்ந்து 13 ஆவது இடத்திற்கு வந்துள்ளார். இந்திய அணித் தலைவர் டோனி 815 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

அதே சமயம் யுவராஜ்சிங், கௌதம் கம்பீர் ஆகியோருக்கு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. 3ஆவது இடத்தில் இருந்த யுவராஜ் ஒரு இடம் சரிந்து சந்தர்போலுடன் 4ஆவது இடத்தையும், கம்பீர் 4 இடங்கள் இறங்கி கிப்ஸுடன் 16 ஆவது இடத்தையும் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த தொடரில் நியூஸிலாந்து அணித்தலைவர் வித்ரோறி 2 விக்கெட்டுகள் மட்டுமே எடுத்தார் இதனால் ஒரு நாள் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் அவரது முதலிடம் பறிபோயுள்ளது. அவர் 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறார். இலங்கை வேகப்பந்து வீச்சாளர் நுவான் குலசேகர முதல் முறையாக முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

சகலதுறை ஆட்டக்காரர்கள் தரவரிசையில் இந்தியாவின் யுவராஜ்சிங் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் முறையாக முதல் 5 இடங்களுக்குள் நுழைந்து 3ஆவது இடத்தை பிடித்துள்ளார். இதில் ஷகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்), பிளின்ரொப் (இங்கிலாந்து) முறையே முதல் 2 இடங்களை வகிக்கின்றனர்.

நியூஸிலாந்துடன் ஒரு நாள் தொடரை இந்திய அணி 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியதால் அணிகளுக்கான தரவரிசையில் இந்திய அணி 2 புள்ளிகளை கூடுதலாக சேர்த்து மொத்தம் 122 புள்ளிகளை பெற்றிருக்கிறது. ஆனால் இந்திய அணியின் தரவரிசையில் மாற்றமில்லை. தொடர்ந்து 3ஆவது இடத்திலேயே நீடிக்கிறது. தென்னாபிரிக்கா 125 புள்ளிகளுடன் முதலிடத்திலும், அவுஸ்திரேலியா 124 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், நியூஸிலாந்து 112 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 111 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் உள்ளன.




# ஐ.பி.எல். போட்டிகளுக்கான அட்டவணை தொடர்ந்தும் இழுபறியில்

DLF INDIAN PREMIER LEAGUE

புதுடில்லி, மார்ச் 18

ஐ.பி.எல். தொடருக்கான சிக்கல் நீடிக்கிறது. மத்திய உள்துறை அமைச்சக அதிகாரிகளுடன் ஐ.பி.எல். நிர்வாகிகள் நடத்திய பேச்சில் உடன்பாடு ஏற்படவில்லை. லோக்சபா தேர்தல் காரணமாக, போட்டிகளுக்கு துணை இராணுவப் படையின் பாதுகாப்பு அளிக்க முடியாது என திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்ட புதிய அட்டவணை நேற்று வெளியிடப்படவிருந்தது. இதை, அனைத்து தரப்பும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே போட்டிகள் திட்டமிட்டபடி நடக்கும்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் வரும் 10ஆம் திகதி முதல் மே 24 வரை இரண்டாவது ருவெண்ரி 20 தொடர் நடக்கவுள்ளது. சமீபத்தில் லாகூரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் லோக்சபா தேர்தல் காரணமாக, இத்தொடருக்குப் பாதுகாப்பு அளிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. மாநில அரசுகளின் வேண்டுகோளை ஏற்று, அட்டவணையை மாற்றி அமைக்கும்படி ஐ.பி.எல். நிர்வாகத்தை மத்திய உள்துறை அமைச்சு கேட்டுக்கொண்டது.

இது தொடர்பாக பி.சி.சி.ஐ. செயலர் சீனிவாசன் தலைமையில் மூன்று பேர் அடங்கிய ஐ.பி.எல். குழுவினர், மத்திய உள்துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் ராமன் ஸ்ரீவஸ்தவாவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர். இதில், அட்டவணையில் மேலோட்டமாகச் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் நிராகரிக்கப்பட்டன. துணை இராணுவப் படையின் பாதுகாப்பு அளிக்க முடியாது என்றும், மாநில அரசுகளுடன் கலந்துபேசி உரிய மாற்றங்களைச் செய்யும்படியும் கண்டிப்புடன் அறிவுறுத்தப்பட்டது. இதனால், மீண்டும் ஒருமுறை அட்டவணையில் மாற்றம் செய்து நேற்று வெளியிடப்படவிருந்தது.

## பெண்களுக்கான உலகக் கிண்ணப் போட்டி

# இந்தியாவை வென்றது நியூஸிலாந்து


வெற்றிக் களிப்பில் நியூஸிலாந்து வீராங்கனைகள்....

பெண்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்று வருகிறது இதில் சுப்பர்சிக்ஸுக்கு முன்னேறிய அணிகளுக்கிடையிலான போட்டிகள் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று நடந்த போட்டியில் இந்திய - நியூஸிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய இந்திய 49.4 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 207 ஓட்டங்களை எடுத்தது. அடுத்துக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் 210 ஓட்டங்களை (47.4 ஓவர்கள்) எடுத்து வெற்றி பெற்றது.

# டெஸ்ட் தொடரை வென்ற மேற்கிந்தியத் தீவுகள் ருவென்ரி 20 போட்டியையும் தன்வசப்படுத்தியது

டிரினிடாட், மார்ச் 18

இங்கிலாந்துக்கு எதிரான ருவெண்ரி 20 போட்டியில் சர்வான் அரைசதம் கடந்து கைகொடுக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இங்கிலாந்து அணி ஐந்து டெஸ்ட், ஒரு ருவெண்ரி 20 மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடரை மேற்கிந்தித் தீவுகள் கைப்பற்றியது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான ஒரே ஒரு ருவெண்ரி 20 போட்டி டிரினிடாட்டில் நேற்றுமுன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி போபரா (13), டேவிஸ் (27) ஓட்டங்களுடன் வெளியேறினர். அடுத்து வந்த பீற்றர்ஸன் (12), ஒவைஸ் ஷா (6), கொலிங்வூட் (14), அணித்தலைவர் ஸ்டிரொஸ் (22) உள்ளிட்ட முன்னிலை வீரர்கள் பெரிய அளவில் சாதிக்கவில்லை.

பின்னர் களமிறங்கியவர்கள் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினர். இங்கிலாந்து அணி 19.1 ஓவர்களில் 121 ஓட்டங்களுக்குள் சுருண்டது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் பென் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

எளிய இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பிளட்சர் (6) ஏமாற்றம் தந்தார். அடுத்து வந்த சந்தர்போல் (12) நீண்டநேரம் நிலைக்கவில்லை. பின்னர் களமிறங்கிய சைமன்சுடன் ஜோடி சேர்ந்த சர்வான் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்கள் சேர்த்தார். இவர் 46 பந்தில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த பிராவோ (8) விரைவில் வெளியேறினார். சைமன்ஸ் (23), போலார்டு (4) ஜோடி பொறுப்பாக ஆடி அணியை வெற்றி பெறசெய்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி 18 ஓவரில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 123 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து சார்பில் அம்ஜத் கான் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். சர்வான் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. அணியில் பா.ம.க.

**திருமா நம்பிக்கை**

தி.மு.க. அணியில் பா.ம.க. இடம்பெறும் - என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முதல்வர் கருணாநிதியை, அவரது கோபாலபுரம் இல்லத்தில் நேற்றுமுன்தினம் திருமா



வளவன் சந்தித்துப் பேசினார். பின்னர், செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் இருந்து தி.மு.க. அணியில் விடுதலைச் சிறுத்தைகள் நீடிக்கிறது. இதை, அதிகாரபூர்வமாக தற்போது மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார் முதல்வர் கருணாநிதி. அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில், முதல்வரைச் சந்தித்துப் பேசினோம் - என்று மேலும் அவர் தெரிவித்தார்.

# ஈழத் தமிழருக்குத் துரோகம் செய்தோரை மக்களுக்குத் தோலுரித்துக் காட்டுவோம்!

## பழ. நெடுமாறன் சூளுரை

புதுச்சேரி, மார்ச் 18

**ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் செய்தவர்களைத் தோலுரித்துக் காட்டுவோம். இந்திரா காந்தியிடம் தொலைநோக்குப் பார்வை இருந்தது. இதை மன்மோகன்சிங்கிடம் எதிர்பார்க்க முடியாது. புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று பிரணாப் முகர்ஜி சொல்கிறார். இந்திரா காந்தி வழங்கிய ஆயுதங்கள்தான் புலிகளிடம் உள்ளன. இந்த உண்மை காங்கிரஸ் கட்சியினருக்குத் தெரியாது - என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் புதுச்சேரியில் திங்கட்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட 48 நாள்களில் பல ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், மக்கள் திரள் பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன. ஆறரைக் கோடி தமிழ் மக்களின் உணர்வுகளை நாம் மதித்து நடக்கிறோம். இதுவரை 11 இளைஞர்கள், உயிரைத் துச்சமென மதித்து தங்களை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு போரை நிறுத்தச் சொல்லியிருந்தால் போர் நிறுத்தப்பட்டிருக்கும்.

1983இல் இந்திராகாந்தி இலங்கையில் இனப்படுகொலை நடக்கிறது. இதைப் பார்த்துக் கொண்டு இந்தியா சும்மா இருக்காது என்று கூறினார். இதைக் கேட்ட ஜெயவர்த்தன டில்லிக்கு வந்துவிட்டார்.

இந்திரா காந்தியிடம் தொலைநோக்குப் பார்வை இருந்தது. இதை மன்மோகன்சிங்கிடம் எதிர்பார்க்க முடியாது. விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்று பிரணாப் முகர்ஜி சொல்கிறார். இந்திரா காந்தி வழங்கிய ஆயுதங்கள்தான் புலிகளிடம் உள்ளன. இந்த உண்மை காங்கிரஸ் கட்சியினருக்குத் தெரியாது. அவர்களுக்கு உலக வரலாறும், இந்திய வரலாறும் தெரியவில்லை. காங்கிரஸ் வரலாறும்தெரியவில்லை.



தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினர் மனிதாபிமான அடிப்படையில் கூட போரை நிறுத்தச் சொல்லவில்லை. உள்துறை அமைச்சராக உள்ள ப.சிதம்பரம் பிரதமருக்கு அடுத்த பொறுப்பில் இருப்பவர். அவர் சென்னையில் பேசும்போது தமிழர்களுக்கு ஆறுதலாக 4 வார்த்தை கூறுவார் என்று நினைத்தோம். ஆனால் அவர் மாறாகப் பேசியுள்ளார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வி.தங்கபாலு பேசுகையில், இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை, அதில் நாம் தலையிட முடியாது என்கிறார்.

காங்கிரஸார்கள் பேசுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. இதை தமிழ் இதயங்கள் மன்னிக்காது. இதற்குப் பதில் சொல்லும் காலம் வந்துவிட்டது. தேர்தல் வரும் போகும். வரப்போகும் தேர்தல் களத்தை ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக மாற்றுவோம். யார் யார் துரோகம் செய்தார்கள் என்று தோலுரித்துக் காட்டுவோம் - என்றார்.

# இலங்கைக்கு இந்தியா ஆயுதம் வழங்கி ஜனநாயகக் குரல்வளையை நசுக்குகிறது

## சிறையில் சீமானைச் சந்தித்த பின் வைகோ சீறல்



புதுச்சேரி, மார்ச் 18

இலங்கை அரசுக்கு உதவி வரும் இந்திய அரசு தமிழர்களுக்குத் துரோகம் செய்து வருகிறது. இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுதம் வழங்கி வருகிறது. இது ஜனநாயகக் குரல்வளையை நசுக்குவது போல் உள்ளது - என்று ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள திரைப்பட இயக்குநர் சீமானைப் பார்த்துவிட்டு வந்த அவர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த இயக்குநர் சீமானை புதுச்சேரி அரசு முதலில் சாதாரண குற்ற வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தது. இதையடுத்து தமிழ்நாட்டில் பாசிச ஆட்சி நடத்தும் முதல்வர் கருணாநிதி, சீமானை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்ய தன் கையில் உள்ள பொலிஸ் துறையை ஏவிவிட்டு ஏற்பாடு செய்தார்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசிய சீமான் மீது இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் என வழக்குப் பதிவு செய்துள்ளனர். அரசியல்வாதிகள் பேசாததையா இயக்குநர் சீமான் பேசிவிட்டார்?

தமிழக மீனவர்களை இலங்கைக் கடல் எல்லைக்குள் செல்ல வேண்டாம் என்று பிரதமர் மன்மோகன்சிங் கேட்டுக் கொண்டுள்ளார். இலங்கை இராணுவம் சுட்டதில் இதுவரை தமிழக மீனவர்கள் 500 பேர் இறந்துள்ளனர். இதுவரை யாரும் இதற்குக் கண்டனம் தெரிவிக்கவில்லை.

இதுவரை ஆயிரம் கோடி ரூபா பணம் வட்டியில்லாமல் இந்தியா கொடுத்துள்ளது. இந்தியா மட்டுமன்றி பாகிஸ்தான், சீனா, ஈரான், ரஷ்யா போன்ற நாடுகளும் இலங்கைக்கு ஆயுத உதவி செய்து வருகின்றன. இது ஜனநாயகக் குரல்வளையை நசுக்குவது போல் உள்ளது. இப் பிரச்சினை வரும் தேர்தலில் எதிரொலிக்கும். காங்கிரஸ் கூட்டணி தேர்தலில் படுதோல்வி அடையும்.

காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக வரும் தேர்தலில் பிரசாரம் செய்வார்கள் என்று சீமான், நாஞ்சில்சம்பத், கொளத்தூர் மணி ஆகியோரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தந்திரமாக கைது செய்துவிட்டனர்.

இலங்கைத் தமிழர்களுக்காக இதுவரை 11 இளைஞர்கள் தீக்குளித்து இறந்துள்ளனர். இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை என்ற தீ தமிழர்கள் மனதில் கொழுந்து விட்டு எரிகிறது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ் கட்சிகளுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் - என்றார்.

# 40 ஆயிரம் ஈழக் குடும்பங்களுக்கு மீண்டும் சமையல் பாத்திரம் - உணவுப்பொருள்கள்

## கருணாநிதி அறிவிப்பு



ஈழத் தமிழர்களுக்கு சமையல் பாத்திரங்கள் மற்றும்உணவுப்பொருள்கள் தனித்தனியே சிப்பங்களாகத் தயார் செய்து மிக விரைவில் அனுப்பப்படவுள்ளன - என்று கருணாநிதி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்காக மொத்தமாக ரூபா 50 கோடியே 53 லட்சம் சேகரிக்கப்பட்டு, அரசு கணக்கில் வரவாக வைக்கப்பட்டது.

அதில், இதுவரை ரூ.10 கோடியே 7 லட்சத்துக்கு நிவாரணப் பொருள்கள் வாங்கப்பட்டு இந்திய அரசின் அனுமதியோடு இலங்கைக்கு அனுப்பப்பட்டன.

தற்போது, பாதிப்புக்கு உள்ளாயிருக்கும் 40 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் உடனடியாகத் தேவையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பாதிப்புக்குள்ளான 40 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களுக்கு அரிசி, பருப்பு, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களுடன், குளிப்பதற்கான சவர்க்காரம், துவைப்பதற்கான சவர்க்காரம், பற்பசை ஆகிய பொருள்கள் மற்றும் சமையல் செய்வதற்கான எவர்சில்வர் பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்குவதற்கேற்ற வகையில் தனித்தனியே சிப்பங்களாகத் தயார் செய்து விரைவில் அனுப்பப்படவுள்ளன.


இந்தப் பொருள்கள் இந்திய அரசின் அனுமதியுடன் இலங்கையிலே உள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டு, முறையாக பாதிக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும். அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ள சமையல் பாத்திரங்களை முதலமைச்சர் கருணாநிதி கடந்த 14ஆம் திகதி பார்வையிட்டு தேர்வு செய்தார் என்றுள்ளது.

# வைகோ பங்கேற்ற கூட்டத்திற்கு வராத டாக்டர் ராமதாஸ், தொல்.திருமாவளவன்

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் புதுச்சேரியில் நேற்றுமுன்தினம் வைகோ பங்கேற்று பேசிய கூட்டத்தில் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் ஆகியோர் பங்கேற்கவில்லை.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி நடைபெற்ற இப் பொதுக்கூட்டத்துக்கு நெடுமாறன் தலைமை வகித்தார்.

ராமதாஸ், கம்யூனிஸ்ட் தா.பாண்டியன், பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் ஆகியோரின் பெயர்கள் பொதுக்கூட்ட அழைப்பிதழ்களில் இடம் பெற்றிருந்தன. ஆனால் இக் கட்சிகளின் 2ஆம் கட்டத் தலைவர்கள் மட்டும் பங்கேற்றனர்.



வைகோ பங்கேற்ற கூட்டத்தில் ராமதாஸும் திருமாவளவனும் பங்கேற்கவில்லை.

தி.மு.க. கூட்டணியின் பக்கம் விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க. செல்லும் என்ற நிலையில், அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் வைகோ பங்கேற்கும் கூட்டத்தில் இந்த இரு தலைவர்களும் பங்கேற்றால் தர்மசங்கடமான சூழ்நிலை உருவாகும். அதைக் கருத்தில் கொண்டு இருவரும் பங்கேற்காமல் தவிர்த்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# தேர்தலுக்காக ஈழ ஆதரவைக் கைவிட்ட கட்சிகளைக் கண்டித்துப் பொதுக்கூட்டம்

## தமிழீழ விடுதலை ஆதரவு இயக்கம் சார்பில்

சென்னை, மார்ச் 18

ஈழ மக்களது அவலநிலையை தங்கள் தேர்தல் அரசியல் லாபத்துக்காக பயன்படுத்தி ஈழ ஆதரவினை இப்பொழுது கைவிட்டுவிட்ட அரசியல் கட்சிகளைக் கண்டித்தும் ஈழ விடுதலையை அங்கீகரிக்கக் கோரியும், அரசியலில் ஈடுபடாத மக்கள் நல அமைப்புகள் இணைந்து தமிழீழ விடுதலை ஆதரவு இயக்கம் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தூத்துக்குடி முதலாம் நுழைவாயில்காந்தி சிலை முன்பாக நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் புரட்சிகர இளைஞர் முன்னணியின் இரா.தமிழரசன் தலைமையில் தமிழீழ விடுதலை ஆதரவுக் கூட்டம் நடைபெற்றது. திருக்குமரன் வரவேற்புரையாற்ற புரட்சிகர தொழிலாளர் முன்னணியின் சுஜித், செந்தமிழ், சர்வதேச மனித உரிமைகள் கழக ஜா.பெனடிக்ட் , மக்கள் உரிமைக்குழு அதிசயக்குமார், ஆதித்தமிழர் பேரவை இரா.வே.மனோகர் , தமிழர் தேசிய இயக்க துரை அரிமா, தமிழக இளைஞர் கழக தமிழரசன் ஆகியோர் உரையாற்றினர். இந்த நிகழ்வில் பெரும்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

# 3ஆவது கண் திறந்தால் எதிரிகள் சாம்பல்

## கருணாநிதிக்கு ஜெயலலிதா எச்சரிக்கை!

சென்னை, மார்ச் 18



சிவபெருமானின் மூன்றாவது கண் திறந்தால் எதிரிகள் எரிந்து சாம்பலாகிப் போவார்கள் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேசிய முதல்வர் கருணாநிதி, மூன்றாவது அணி என்பது மூன்றாவது கண் போன்றது என்று தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து சென்னையில் உள்ள தனது இல்லத்தில் ஜெயலலிதா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

காங்கிரஸ், பா.ஜ.கவுக்கு மாற்றாக தேசிய அளவில் உருவாகியுள்ள அணியை 3ஆவது அணி என பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. அணியில் உள்ள கட்சிகள் அதனை மாற்று அணி என அழைக்கின்றன.

அந்த அணி குறித்து கருத்துத் தெரிவித்த முதல்வர் கருணாநிதி, மூன்றாவது அணி, மூன்றாவது கண் போன்றது என விமர்சித்துள்ளார்.

மூன்றாவது கண் என்பது சிவபெருமானின் நெற்றிக் கண்ணைக் குறிக்கும். நெற்றிக் கண் மூடியிருக்கும் வரைதான் தவறு செய்வோருக்குப் பாதுகாப்பு. நெற்றிக் கண் திறந்து விட்டால் எதிரேயுள்ளவர்கள் எரிந்து சாம்பலாகிப் போவார்கள் என்பதை கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டில்லியில் மூன்றாவது அணித் தலைவர்களுக்கு பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி அளித்த விருந்தில் அ.தி.மு.க. பங்கேற்காதமை பெரிய விடயமல்ல.

மூன்றாவது அணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதை இப்போதே கூற வேண்டிய அவசியம் இல்லை. அதுகுறித்து தேர்தலுக்குப் பின்னரே முடிவு செய்ய முடியும்.

அ.தி.மு.கவைப் பொறுத்தவரை தமிழகம், புதுவையில் உள்ள 40 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்பதில்தான் முழுக் கவனமும் உள்ளது - என்றார்.

# ஈழப் படுகொலையைத் தடுக்க வலியுறுத்தி ரஷ்ய நாட்டுத் தூதரிடம் கோரிக்கை மனு

## தமிழக மாணவர்கள் கையளிப்பு

சென்னை, மார்ச் 18

சென்னையில் தமிழீழ ஆதரவு மாணவர்கள் ஈழ மக்கள் மீதான இனப்படுகொலையை தடுத்து நிறுத்தக்கோரி சென்னையிலுள்ள ரஷ்ய நாட்டு தூதரிடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர்.

கடந்த சனிக்கிழமை ( 14.03.2009 ) சென்னை மன்றோ சிலையிலிருந்து பேரணியாகப் புறப்பட்ட மாணவர் போராட்டக் குழுவினர் -

சர்வதேச சமூகமே, இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்து.

ஈழத் தமிழர் பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்.


ஈழத்தில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரி.

ஈழத்தில் தற்போது நிலவும் உணவுப் பற்றாக்குறையால் இறக்கும் தமிழர்களை காப்பாற்ற உடனே நடவடிக்கை எடு.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு என்ற கோரிக்கைகளை முழங்கியபடி சேப்பாக்கத்திலுள்ள ரஷ்ய நாட்டுத் தூதரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்ற இந்த நிகழ்வில் சிறிராம், செந்தில், பாரதிராசா போன்ற மாணவர்களும் மென்பொருள் துறை வல்லுநர்களும் ஒருங்கிணைத்திருந்தனர் எனக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக இதுவரை கடமையாற்றி வந்த ஐயாத்துரை ஞானதாஸன் சமீபத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இந்த நிகழ்வுக்குப் பின்னர் நீதி அமைச்சின் செயலாளர் எஸ்.கே.கமெலத் அவரை வாழ்த்துவதை முதலாவது படத்தில் காணலாம். சட்டத்தரணிகள் மற்றும் நண்பர்கள் அவரை வாழ்த்துவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

சிட்னியில் சிரேஷ்ட வழக்குத் தொடுநராகக் கடமையாற்றும் ஞானதாஸனின் சகோதரர் கிருபைதாஸன் மற்றும் தற்பொழுது மலேசியாவில் விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் டாக்டர் அரியராணி (ஞானதாஸனின் பாரியார்) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

ஜனாதிபதி சட்டத்தரணி ஐயாத்துரை ஞானதாஸன் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினருக்குச் சிகிச்சை அளிக்க வடக்குக்குச் செல்ல மறுக்கும் டாக்டர்கள்

## சபையில் சுகாதார அமைச்சர் விசனம்

கொழும்பு, மார்ச் 18

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள முப்படையினருக்கும் சிகிச்சையளிப்பதற்கு கூட வடக்கிற்குச் செல்ல இலங்கை வைத்தியர்கள் மறுக்கின்றனர்.

- இவ்வாறு சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் விசனம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இராணுவத்தினருக்குச் சிகிச்சையளிக்க வடக்கிற்கு செல்வதற்கு இலங்கை வைத்தியர்கள் தயக்கம் காட்டுகின்றனர். தான் பலவந்தமாக இலங்கை வைத்தியர்கள் 50 பேரை இராணுவத்துக்குச் சிகிச்சையளிக்க அனுப்பி வைத்தேன்.

அப்படிச் செல்லாவிட்டால், வைத்தியத் துறையில் நியமனம் வழங்கப்படமாட்டாது என்று நான் அவர்களை மிரட்டினேன்.

முப்படையினருக்குச் சிகிச்சையளிப்பதற்காக வைத்தியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் எவரும் விண்ணப்பிக்கவில்லை.


வெறுமனே நாட்டுப்பற்றாளர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். அதனால், படையினருக்குச் சிகிச்சையளிப்பதற்கு அழைக்கும் போது வரமறுக்கின்றனர்.

# ஏழு வீரர்களுடன் டிஸ்கவரி ஓடம் ஞாயிறன்று விண்வெளிக்கு சென்றது

கேப் கனவெரல், மார்ச் 18

டிஸ்கவரி விண்வெளி ஓடம் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள கேப் கனவெரல் கென்னடி ஆராய்ச்சி மையத்திலிருந்து, ஏழு விண்வெளி வீரர்களுடன் ஞாயிற்றுக்கிழமை இரவு விண்ணுக்குச் செலுத்தப்பட்டது.

விண்ணில் செலுத்தப்பட்ட 8 நிமிடங்களுக்குப் பின் இந்த விண்வெளி ஓடம் வான்வெளி மண்டலத்தில் நுழைந்தது. இந்த விண்வெளி ஓடத்தின் வேகம் மணிக்கு 28 ஆயிரம் கிலோ மீற்றராகும்.



விண்வெளியில் தற்போது மிதந்து கொண்டிருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தை டிஸ்கவரி விண்வெளி ஓடம் சென்றடைய இரண்டு நாள்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்தவுடன் இதில் செல்லும் விண்வெளி வீரர்கள் அங்கு 13 நாள்கள் தங்கியிருந்து ஆராய்ச்சியில் ஈடுபடுவார்கள்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் பொருத்துவதற்காக சூரிய மின் உற்பத்தி தகடுகள் டிஸ்கவரி விண்வெளி ஓடத்தில் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சர்வதேச விண்வெளி நிலையத்திற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய இந்த சூரிய மின் உற்பத்தி தகடுகள் பொருத்தப் படவுள்ளன.

இதைப் பொருத்தும் பணியின் போது, விண்வெளி வீரர்கள் விண்வெளியில் நடந்து சாகஸம் செய்வார்கள். இந்த விண்வெளி ஓடத்தில் செல்லும் ஜப்பான் விண்வெளி வீரர் கோய்சி வகாடா சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே தங்கியிருந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்.

# ஆப்கானிஸ்தானில் போரை நிறுத்தப் பேச்சு: ஒபாமாவின் திட்டத்திற்குத் தலிபான் இணக்கம்

காபூல், மார்ச் 18

ஆப்கானிஸ்தானில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பேச்சுகள் நடத்தலாம் என்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் திட்டத்துக்குத் தலிபான் தலைவர் முல்லா ஒமர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க இரட்டைக் கோபுரம் மீது பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்குச் சூத்திரதாரியான அல்-குவைதாவின் தலைவர் ஒசாமா பின்லேடன் அப்போது ஆப்கானில் தங்கியிருந்தார். தலிபான்களின் ஆட்சியில் ஆப்கான் இருந்தது.

இத்தாக்குதலை அடுத்து, ஒசாமா பின்லேடனை தன்னிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா, தலிபான் ஆட்சித் தலைவர் முல்லா ஒமரிடம் கோரிக்கை விடுத்தது. இக்கோரிக்கையை முல்லா ஒமர் அடியோடு நிராகரித்துவிட்டார்.

இரட்டைக் கோபுரம் மீதான தாக்குதலில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவிகளான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இதனால், அமெரிக்கா ஆத்திரமடைந்திருந்தது. தாக்குதலுக்குக் காரணமான ஒசாமா பின்லேடனை ஆப்கான் கையளிக்க மறுத்தமையால், அமெரிக்காவின் ஆத்திரம் மேலும் அதிகரித்தது.

ஆப்கானில் தீவிரவாதிகளுக்கு எதிரான போரில், அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப் படைகள் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை ஈட்டவில்லை என்பதை சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஒப்புக்கொண்டுள்ளார்.

அவர் ஆப்கானிஸ்தானில் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, மிதவாத தீவிரவாதிகளுடன் பேச்சுகள் நடத்தப்படும் என அறிவித்தல் விடுத்தார். இதற்கு தலிபான் தலைவர் முல்லா ஒமர் வரவேற்பும் சம்மதமும் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினர்களின் சார்பில் தற்போது சவூதி அரேபிய உள்துறை அமைச்சரும், இளவரசருமான மக்ரின் பின் அப்துல் அஜீஸ் பூர் வாங்கப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளார். இவற்றில் அப்துல்லா அனாஸ் என்பவரும் பங்கு பற்றியுள்ளார். இவர் அமெரிக்காவின் உத்தேச பேச்சுகளுக்கு தலி பான் தலைவர் முல்லா ஒமர் வரவேற்பும், சம்மதமும் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அப்துல்லா அனஸ், அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனின் முன்னாள் நண்பர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்சாயின் தம்பி ஹமீத் கர்சாயும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் அழைப்புக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, ஹமீத் கர்சாய் குறிப்பிடுகையில், ''கடந்த ஐந்து நாள்களாக நான் உத்தேச பேச்சுகள் தொடர்பாக தலிபான் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி வருகின்றேன். ஒபாமாவின் அழைப்பு அபார நம்பிக்கையையும், புத்துணர்வையும் ஏற்படுத்தியுள்ளது. பேச்சுகள் நடத்துவதைத் தவிர வேறு வழியே கிடையாது. அப்பாவிகளின் உயிர் இழப்புகளைத் தடுக்கவும் அமைதியை நிலை நாட்டவும் இதுவே சரியான மார்க்கம்'' என்றார்.

# ரணிலை ஐ.தே.கவின் எம்.பிக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மேர்வின் சில்வா ஆகியோர் இந்தப் புரளியைக் கிளப்பினர்.

எதிர்க்கட்சித் தலைவர் அவரின் கட்சி உறுப்பினர்களாலேயே தடுத்துவைத்துத் தாக்கப்படுகின்றார் என்றும் அவரை மீட்பதற்காக நாம் சபை நடவடிக்கைகளை சற்று இடைநிறுத்தவேண்டும் என்றும் அவர்கள் கூறினர்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாடாளுமன்றக்குழு அறையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் வழமைக்கு மாறாக இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

### ரணில் தாக்கப்படுவதாக அமைச்சர் அறிவித்தார்

அந்தக் குழுஅறையில் அடைத்துவைக்கப்பட்டே ரணில் தாக்கப்படுகின்றார் என்று அமைச்சர் மேர்வின் சில்வா சபாநாயகரிடம் கூறினார்.

அவரைக் காப்பாற்ற சபை நடவடிக்கையைச் சிறிது நேரம் இடைநிறுத்த வேண்டும் என்று சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அப்படியாயின் சபை நடவடிக்கையைச் சிறிது நேரம் இடைநிறுத்துவோமா என்று அரசின் பிரதான கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன சபையோரிடம் நகைச்சுவையாகக் கேட்டார்.

இதனைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

''உறுப்பினர் ஒருவர் சபைக்கு வருவதற்கு முழு உரிமையும் உண்டு. அதை எவராலும் தடுக்க முடியாது. ஆனால், ஐ.தே.க. உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவரை நாடாளுமன்றக் குழு அறையில் பூட்டி வைத்துத் தாக்குகின்றனர். - என்றார்.

### ஐ.தே.க. உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை

அமைச்சர்கள் இவ்வாறு கூறிய சந்தர்ப்பத்தில் இதற்குப் பதிலளிக்க ஐ.தே.க. உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை. அவர்கள் அனைவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றிக்கொண்டிருந்தனர்.

ரணில் தாக்கப்படுகிறார் என்று கூறியதால் சபையில் பரபரப்பு ஏற்பட்டது. இதன் உண்மையை அறிவதற்காக ஊடகவியலாளர்களும் நாடாளுமன்ற ஊழியர் சிலரும் ஐ.தே.கவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த அறைக்கு முன்பாகக் குவிந்தனர்.

அவ்வாறான சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என்று அங்கு நின்ற பொலிஸாரும் ஐ.தே.க. ஊழியர்கள் சிலரும் கூறினர்.

### வழமையான நாடாளுமன்றக் கூட்டம்

அச்சந்தர்ப்பத்தில் அக்கூட்டத்தில் பங்குபற்றிக்கொண்டிருந்த சஜித் பிரேமதாஸ குழு அறையை விட்டு வெளியே வந்தார். இது தொடர்பாக அவரிடம் கேட்டபோது அப்படி எதுவும் நடக்கவில்லை என்றும் வழமைபோல் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெறுகிறது என்றும் அவர் கூறினார்.

சபையில் கூறப்பட்டதுபோல் அங்கு எதுவித பதற்றமும் நிலவாததாலும் சுமுகமான முறையில் ரணிலின் தலைமையில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்ததைக் கண்டதாலும் ஊடகவியலாளர்கள் அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டம் முடிவுற்றதும் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவும், ஜோன் அமரதுங்க எம்.பியும் முற்பகல் 11 மணியளவில் சபைக்குள் நுழைந்தனர். பிறகு ஏனைய ஐ.தே.க. உறுப் பினர்களும் மெல்ல மெல்ல சபைக்கு வந்தனர்.

11.30 மணியளவில் ரணில் விக்கிரமசிங்க சபைக்குள் நுழைந்தார். அவரைக் கண்ட அமைச்சர்கள் அவர் தாக்கப்பட்டார் என்று கூறப்பட்ட விடயம் தொடர்பில் எதுவும் பேசவில்லை. (அ-சி)

# பயங்கரவாதத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழைப்புகளை வழங்கி வருகின்றது. அந்த ஒத்துழைப்பு காரணமாகவே பயங் கரவாதத்தை எம்மால் இந்தளவுக்கு ஒழிக்க முடிந்துள்ளது. அந்த ஒத்துழைப்பு எமக்குத் தொடர்ந்தும் கிடைத்து வருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம, பஸில் ராஜபக்ஷ ஆகியோர் இந்தியாவுக்கு மேற்கொண்ட இராஜதந்திர விஜயங்களின் அடிப்படையில்தான் இந்தியா இந்த உதவிகளை எமக்கு வழங்கி வருகின்றது.

அந்த ஒத்துழைப்பின் ஒரு பகுதியாகத்தான் இந்தியா, வைத்தியர்களை எமக்கு அனுப்பி வைத்துள்ளது. அவர்கள் இராணுவ வைத்தியர்கள் அல்லர். இராணுவத்திற்குச் சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள்.

ஆனால், இந்த வைத்தியர்களின் வருகையை ஜே.வி.பியினர் எதிர்க்கின்றனர். ஜே.வி.பியின் சுவரொட்டிப் போராட்டத்தில் புதிய தொனியைச் சேர்ப்பதற்காகவே ஜே.வி.பியினர் இந்த விடயத்தைப் பெரிதாகத் தூக்கிப்பிடிக்கின்றனர்.

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றாது அந்த நெருப்பை அணைக்கும் நடவடிக்கையில்தான் நாம் இப்போது ஈடுபட்டு வருகிறோம். அந்த வகையில் எமக்கு உதவி வழங்கும் நாடுகளை நாம் பகைத்துக் கொள்ளமாட்டோம்.

இந்தியா எமக்கு மருந்துப் பொருள்களையும் வழங்கியது. அவற்றை நாம் எமது சுகாதார அமைச்சின் ஊடாக சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விநியோகித்துள்ளோம்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் விமானம் மூலம் பருப்பு போட்டது போல் அந்நாடு இப்போது செய்யவில்லை.

இலங்கை வந்திருக்கும் இந்திய வைத்தியர்களின் திறமை தொடர்பில் நாம் திருப்தியடைகின்றோம். அவர்கள் முறையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களால் அமைக்கப்பட்டுள்ள புல்மோட்டை வைத்தியசாலை நிரந்தரமானதல்ல. அது நடமாடும் வைத்தியசாலை. தேவையில்லாத பட்சத்தில் அது இல்லாது செய்யப்படும்.

புல்மோட்டையில் அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளாலோ அல்லது இந்திய மருத்துவர்களாலோ எமது நாட்டின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படாது. இதை ஜே.வி.பி. நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது இந்தியாவின் உதவியைப் பெறுமாறு கூறிய ஜே.வி.பி. இப்போது இந்தியாவிடமிருந்து எந்த உதவிகளையும் பெறக்கூடாது என்கிறது. அக்கட்சி அடிக்கடி தனது நிலைப்பாட்டை மாற்றுகின்றது.

புல்மோட்டைக்கு வந்துள்ள இந்திய மருத்துவர்கள் அங்குள்ள கனியவளங்களை எடுத்துச் செல்ல மாட்டார்கள். அவர்கள் அதற்காக வரவில்லை. மக்களுக்குச் சிகிச்சையளிக்கவே வந்துள்ளனர்.

இந்தப் புல்மோட்டை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் மாத்திரமே வழங்கப்படும். அதன்பிறகு நோயாளிகள் பதவிய, கந்தளாய் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படுவர்.

எமக்கு உதவி வழங்கத் தயாராகவுள்ள நாடுகளிடமிருந்து உதவியைப் பெற நாம் தயாராகவுள்ளோம். அந்த உதவிகளை நாம் நிராகரிக்க மாட்டோம்.

இது தொடர்பில் சுவிஸ், நோர்வே போன்ற நாடுகளின் தூதுவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளனர். அந் நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற நாம் தயாராகவே உள்ளோம் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# மேலும் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க உடனடியாக மருந்துப் பொருள்களை அனுப்புங்கள்

## முல்லை., கிளிநொச்சி சுகாதாரப் பணிப்பாளர்கள் அவசர கோரிக்கை

கொழும்பு, மார்ச் 18

வன்னி சுகாதார நிலைமையை கருத்தில்கொண்டு மேலும் உயிரிழப்புக்கள் ஏற்படுவதைக் குறைக்க உடனடியாக மருந்துப் பொருள்களை அனுப்பிவைக்கவும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் சுகாதார அமைச்சிடம் மேற்கண்ட அவசர கோரிக்கையை நேற்று விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.வரதராஜன் ஆகியோர் கூட்டாக சுகாதார அமைச்சின் ஆலோசகர் டாக்டர் வி.ஜெகநாதனுக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளனர்.

கடந்த நான்கு மாதங்களாக போதுமான மருந்து வகைகள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களிற்கு கிடைக்கவில்லை. கடந்த வருட இறுதி காலாண்டிற்கும், இவ்வருட முதல் காலாண்டிற்குமாக 5 சதவீதத்திற்கும் குறைவான மருந்து வகைகளும், துணி வகைகளும் கிடைக்கப்பெற்றன. இது தொடர்பாகவும் மருந்து பொருள்களின் தேவைகள் குறித்தும் ஏற்கனவே இரு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் அறிவித்திருந்தோம்.

மோதல்கள் காரணமாக அதிகமானோர் காயமடைகின்றனர். எனவே அதிகளவு மருந்துப் பொருள்கள் தேவைப்படுகின்றன. முக்கியமாக அனெஸ்தெடிக் (Anesthetic), அன்டிபயோடிக்ஸ் (Antibiotics), அனல்ஜெசிக்ஸ் (Analgesics) மற்றும் IV புளுயிட் (IV fluids) போன்ற மருந்து வகைகள் அதிகளவில் தேவைப்படுகின்றன.

2009 ஜனவரி மாதம் வரை 500 பொது மக்கள் மோதல்களில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போதும், பின்பும் உயிரிழந்துள்ளமை வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது. அதேவேளை வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படாமலேயே ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் படுகாயமடைந்தமையே உயிரிழப்பிற்கு காரணம்.

வைத்தியசாலைகளில் போதுமான மருந்துப் பொருள்களும் ,உட்கட்டமைப்பு வசதிகளும் காணப்பட்டிருப்பின் அதிகளவான உயிரிழப்புக்களை தவிர்த்திருக்கலாம். எனினும் முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் அவசர உயிர்காப்பு சிகிச்சை கூட மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாக அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், நிலமையை கருத்திற் கொண்டு உயிரிழப்புக்களை குறைப்ப தற்கு உடனடியாக அடுத்துவரும் ஐ.சி.ஆர்.சி கப்பலில் மருந்துப் பொருள்களை அனுப்பி வைக்குமாறு அக்கடிதத்தில் அவர்கள் கோரியுள்ளனர்.

அதேவேளை மருந்துப்பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை முன்வைக்கப்பட்டதையடுத்து மாகாண ஆணையாளர் அடுத்த தடவை கப்பல் வரும்போது அனுப்பி வைப்பதாக உறுதியளித்திருந்தார். எனினும் அவ்வாறு மருந்துப் பொருள்கள் அக்கப்பலில் சுகாதார அமைச்சிலிருந்து அனுப்பி வைக்கப்படவில்லை என ஐ.சி. ஆர்.சி தமக்கு அறிவித்ததாக அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(1)

## யுத்தத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதலில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் மக்கள் சிக்குண்டுள்ளனர். அங்கு நிலைமை மிக மிக ஆபத்தானதாகவும், அபாயகரமானதாகவும் உள்ளது என பெனிட்டா பெரேரோ வோல்டெனொ எச்சரித்துள்ளார்.

உடனடி யுத்தநிறுத்தமொன்றிற்கு வருமாறும் அல்லது மோதல் நடைபெறும் பகுதியில் இறுதிப் புகலிடமாக உள்ள இடத்திற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான வழிவகைகளைக் கண்டறியுமாறும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை இரு தரப்பும் இதுவரை செவிமடுக்கவில்லையென்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையில் யுத்தநிறுத்தமொன்றைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றிய அரசியல் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விரைவில் செல்லுமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நேச நாடுகளுடன் இணைந்து பல்வேறு வழிகளில் தாம் முயல்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரஸல்ஸில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய பொது விவகார மற்றும் வெளிவிவகார கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கையின் மோசமடையும் மனிதாபிமான நிலை குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இதன்போதே இலங்கைக்கு இராஜதந்திர குழுவொன்றை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. (சி)

# மன்னாரில் சுற்றிவளைப்பு

மன்னார், மார்ச் 18

மன்னார் மூர்வீதி, பிரதான வீதி மற்றும் சின்னக்கடை ஆகிய பகுதிகளில் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணிமுதல் 10.30 மணிவரை இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்பு தேடுதல்களினை மேற்கொண்டனர்.

இதன் போது அப்பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் அலுலகங்களுக்குச் சென்ற இராணுவத்தினரும் பொலிஸாரும் தேடுதல்களை மேற்கொண்டதோடு வீடுகளில் உள்ளவர்களது பெயர் விவரங்கள்களையும் பதிவு செய்து கொண்டனர்.

இதேவேளை மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை பொலிஸார் வரவழைக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது போக்குவரத்திற்காக காத்திருந்த மற்றும் தேவைகளுக்காக வந்திருந்தவர்கள் என சுமார் 500 பேர் வரை சோதனைக்குற்படுத்தப்பட்டனர். எனினும் இந்த நடவடிக்கைகளின் போது எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

## கப்பல் சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை இன்று காலை 7 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். ரயில் நிலையத்துக்கு வருகைதந்து பயணத்தை மேற் கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(அ-1)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு உதவும் சில திட்டங்களுக்கு ஐ.நா. நிதியுதவி வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முகாம்களில் உள்ள மக்களின் நடமாட்டச் சுதந்திரம் குறித்து ஐக்கிய நாடுகள் எப்போதும் வலியுறுத்தி வருகின்றது. முகாம்களில் உள்ளவர்களுக்கு தற்காலிகமாக அடையாள அட்டை வழங்கப்பட்ட பின்னரும் அவர்களுக்கு நடமாட்ட சுதந்திரம் கிட்டவில்லையென்றால், நிதியுதவி குறித்த கடுமையான கேள்விகள் எழலாம் என்று தெரிவித்துள்ளார்.

(அ-சி)

## கோரிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த நிறுத்தங்களால் என்ன சாதிக்கப் போகின்றோம் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இராணுவத் தோல்வியொன்றை சந்திப்பதற்காகப் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர் எனக் குற்றம் சாட்டியுள்ளதுடன் பொதுமக்களை விடுதலைப் புலிகள் உடனடியாக விடுவிக்க வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

அவர்கள் தமது சொந்த மக்களையே பணயமாக, கைதிகளாக வைத்துள்ளனர். சர்வதேச சமூகம் இதனை உணரவேண்டுமென பாலித கோஹன்ன குறிப்பிட்டுள்ளார்.

(சி)

## புதுக்குடியிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடத்தினார் என களமுனைத் தகவல்களை மேற்கோள்காட்டி படைத்தரப்பு நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாக்குதலில் இராணுவத்தினர் எவருக்கும் எந்தவித இழப்புகளும் ஏற்படவில்லை என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து வருகைதரும் மக்களுக்கான வேலைத் திட்டத்தில் படையினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இந்த தற்கொலைதாரி வந்தார். அவர்மீது ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து அவரை சோதனை செய்வதற்காக கைகளை உயர்த்துமாறு இராணுவத்தினர் பணித்தபோது அவர் குண்டை வெடிக்கச் செய்தார் என்று களமுனைத் தகவல்களை மேற்கோள்காட்டி படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

(அ-சி)

## வன்னி நிலைமை குறித்து நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்த மக்களுக்குரிய உணவு மற்றும் மருந்து விநியோகம், ஏனைய உதவிகள், இடம்பெயர்ந்த மக்களின் நலன்புரி நிலையங்கள் மற்றும் நலன்புரிக் கிராமங்கள், அரசாங்கத்தின் அரசியல் தீர்வு முயற்சிகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை என்பன குறித்து தொலைபேசி உரையாடலில் இரு தலைவர்களும் பேசியதாக ஜனாதிபதி மாளிகையால் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையால் வெளியிடப்பட்ட அறிக்கையின் விவரம் வருவாறு:-

அங்கு சிக்குண்டுள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் தடுத்து வருவதாகவும் அதனால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் ஜனாதிபதி ஐ.நாவின் பொதுச் செயலாளருக்கு எடுத்துக்கூறினார்.

விடுதலைப்புலிகள் மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் தங்களது உறுப்பினர்களுக்காக பதுங்கு குழிகளை அமைத்திருக்கிறார்கள் என்றும் அதற்கான அத்தாட்சிகளாக புகைப்படங்களைச் சமர்பிக்க முடியும் என்றும் ஜனாதிபதி செயலாளர் நாயகத்துக்கு விவரித்தார்.

விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்கு வரும் பொது மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

விடுதலைப்புலிகளுக்கு எஞ்சியுள்ள - சுருங்கியுள்ள - பகுதியில் மக்கள் அடர்த்தியாக தங்கி நிற்கமுடியாத ஒரு நிலைமையை இது உருவாக்கி வருகிறது. இது நல்ல அறிகுறியாகும்.

### உணவு மற்றும் பொருள்களின் விநியோகம்

இடம்பெயர்ந்த மக்களுக்குரிய உணவு விநியோகம் குறித்து வினவிய ஐ.நா. செயலாளரிடம் - இப்போது கொள்ளளவு கூடிய பெரிய கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. அதனால் போதிய அளவு உணவுப் பொருள்கள் வன்னி சென்றடைவதாக கூறினார். விடுதலைப் புலிகளின் எதிர் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் ஒழுங்கான தவணை முறைகளில் உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம் மிகச் சீராக நடைபெறுவதாகவும் ஜனாதிபதி விளக்கிக் கூறினார்.

வன்னிக்கு அனுப்பப்படும் உணவு மற்றும் பொருள்களின் பூரண விவரம் ஐ.நா. பொதுச் செயலாளரிடம் சமர்ப்பிப்பதற்கென ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள இலங்கையின் நிரந்திர பிரதிநிதிக்கு அனுப்பப்பட்டு விட்டது.

### பொதுமக்கள் தங்கும் பகுதிகள் மீது கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குவதில்லை

பொதுமக்கள் தங்கியுள்ள பிரதேசங்கள் மீது கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தக்கூடாது என்ற அரசாங்கத்தின் உத்தரவைப் படையினர் மிகக் கவனமாக நடைமுறைப்படுத்துகின்றனர். பாதுகாப்பு வலயங்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என்றும் ஜனாதிபதி, பான் கி மூனிடம் எடுத்துரைத்தார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ளவர்கள் தமது உறவுகளோடு தொடர்பு கொள்வதற்கு வசதியாக தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் தெரிவித்த சிபார்சுக்கு பதிலளிக்கையில் ஜனாதிபதி -

அத்தகைய வசதி மூலம் நாட்டின் ஏனைய பகுதிகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கான உத்தரவுகளை வழங்குவதற்கு விடுத லைப்புலிகள் பயன்படுத்தும் அபாயம் உண்டு. இது விடயத்தில் ஏற்கனவே பல அனுபவங்கள் உள்ளன - என்று விளக்கினார்.

### அரசியல் தீர்வு முயற்சி குறித்து....

அரசியல் தீர்வு ஒன்றை காண்பதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் சகல தரப்பினரும் அதற்குப் பங்களிப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளருக்கு விளக்கிக் கூறினார்.

இவற்றைச் செவிமடுத்த ஐ.நா. செயலாளர் நாயகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து இரண்டு தரப்புகளுக்கும் இடையில் தொடர்ந்து பேச்சுகள் நடைபெற வேண்டும் என்ற விருப்பத்தை பான் கி மூன் வெளியிட்டார்.

ஐ.நா. சபைக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாகவும் இந்த ஒத்துழைப்பு தொடர்வதற்கான ஆக்கபூர்வமான சமிக்ஞை தென்படுவதாகவும் தெரிவித்து ஐ.நா. செயலாளர் தமது உரையாடலை பூர்த்தி செய்து கொண்டார் - என்று ஜனாதிபதி மாளிகைவிடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


உயர் கல்வி புலமைச்சார் ஆசிரிய ஆலோசகர்களின் வழிகாட்டுதற்கமைய புதிய புள்ளியிடல் திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்டது.

அறிமுக விலை 360/=

8 பாடங்கள்

★ சைவநெறி
★ தமிழ்மொழியும் இலக்கியமும்
★ ஆங்கிலம்
★ விஞ்ஞானம்
★ கணிதம்
★ வரலாறு
★ வணிகக்கல்வியும் கணக்கீடும்
★ தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல்

மாவட்ட ரீதியில் முதலிடம்பெறும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்துடன் இவ் வெளியீடானது வெளிவருகின்றது. மேலதிக விவரங்களுக்கு வெளியீட்டைப் பார்க்கவும்

க.பொ.த.சா.தரம் புதிய பாடத்திட்டம் 2008 December பரீட்சை வினாக்களும் விடைகளும்.

ஏக விநியோகஸ்தர்கள்:
அன்னை புத்தகசாலை இல.07, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (நவீன சந்தைக் கட்டடம்).
தொ.பே. 021 222 9831
மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவு விலையில் வழங்கப்படும்.

சகானியா வெளியீடு
SAKANIYA PUBLICATIONS
426/16, K.Cyril C Perera MW.Colombo-13.T. T.P. 0714914473
E.mail: sakaniya publications@yahoo.com



விசேட சலுகை
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகள் மற்றும் அடையாள அட்டைப் படங்களையும் குறைந்த கட்டணத்தில் படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
4R= 10/=
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி,



பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
CIMA
Certificate Level Sat,Sun 7.30.AM
Managerial Level 22.03.2009 Sun 1.PM
விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.